# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டம்

---

(2002 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2002, திசெம்பர் மாதம் 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 44.00** **தபாற் செலவு : ரூபா 11.25**

# 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டம்

[2002 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.– ஓ. 44/ 2002

**ஒருமைப்பட்ட தேசியக் கொள்கையொன்றைப் பின்பற்றிக் குறித்தசில பயன்பாட்டுத் தொழில்களை ஒழுங்குபடுத்துவதற்கு இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவைத் தாபிப்பதற்கும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

## பாகம் I

### முதனிலையானவை

கருக்கப் பெயரும், நடைமுறைக்கு வரும் தேதியும், ஏற்புடைமையும்.

1. (1) இச்சட்டம், 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். இச்சட்டத்தின் வெவ்வேறு ஏற்பாடுகள் தொடர்பில் வெவ்வேறு தேதிகள் நியமிக்கவும்படலாம்.

(2) இச்சட்டமானது, இச்சட்டத்துக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறான, இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அவற்றின் ஒழுங்குபடுத்துகை உரித்தாக்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட பொதுப்பயன்பாட்டுத் தொழில்களுக்கு, ஏற்புடையதாதல் வேண்டும்.

(3) பாராளுமன்றமானது, தீர்மானத்தின்மூலம், இச்சட்டத்துக்கான அட்டவணையை, ஏதேனும் பயன்பாட்டுத் தொழிலை அதற்குச் சேர்ப்பதன்மூலம் அல்லது பொதுப் பயன்பாட்டுத் தொழிலை அகற்றுவதன்மூலம், அத்தகைய சேர்க்கை அல்லது அகற்றுகை பொதுமக்களின் நலனுக்கு அவசியமானதென அல்லது உசிதமானதெனக் கொள்ளுகின்றவிடத்து, திருத்தலாம்.

## பாகம் II

### இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

*இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவைத் தாபித்தல்.*

**2.** (1) (இதனகத்துப்பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு என அழைக்கப்படவேண்டிய ஆணைக்குழுவொன்று தாபிக்கப் படுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்படும் பெயரைக்கொண்டு, இடையறாவழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் உடைய கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பெயரில் அது வழக்குத் தொடுக்கலாம் அத்துடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

*ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்.*

**3.** (1) ஐந்தாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, ஆணைக்குழுவானது, அரசியலமைப்புப் பேரவையின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் : அவர்களுள் —

(அ) ஆகக்குறைந்தது ஓர் உறுப்பினராவது, எந்திரவியற் றுறையில் தகைமையுடையவரும், அனுபவமுடையவருமான ஆளொருவராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) ஆகக்குறைந்தது இன்னுமோர் உறுப்பினர், சட்டத் துறையில் தகைமையுடையவரும், அனுபவமுடையவருமான ஆளொருவராக இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) ஆகக்குறைந்தது இன்னுமோர் உறுப்பினர், தொழில் முகாமைத்துறையில் தகைமையுடையவரும், அனுபவமுடையவருமான ஆளொருவராக இருத்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் முதலாவது உறுப்பினர்கள், இப்பாகம் நடைமுறைக்கு வருவதிலிருந்து நான்கு மாதங்களினுள் நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், ஆணைக்குழுவில் ஏதேனும் அடுத்துப்பின்னரான வெற்றிடமானது, அவ்வெற்றிடம் ஏற்படுவதிலிருந்து மூன்று மாதங்களினுள் நிரப்பப் படுதலும் வேண்டும்.

இச்சட்டத்தின்கீழ் அரசியலமைப்புப் பேரவைக்குரிய கடமைகள்.

**4.** (1) அரசியலமைப்புப் பேரவையானது, இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக எவரேனுமாளை நியமிப்பதற்கு அதன் ஒருப்பாட்டைக் கொடுக்குமுன்னர், அத்தகைய ஆள் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படுவதற்குத் தகைமையுள்ளவரென்றும் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படுவதற்குத் தகைமையிழந்தவரல்லரென்றும் அதனைத் திருப்திப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

(2) அரசியலமைப்புப் பேரவையானது, ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக ஆட்களை நியமிப்பதற்கு அதன் ஒருப்பாட்டைக் கொடுப்பதற்கான அதன் முடிபுகள் பெரும்பான்மை வாக்கின்மூலமானதாயிருத்தல் வேண்டும்.

(3) அரசியலமைப்புப் பேரவையானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதன் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அதற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய தகவலை அதற்குக் கொடுத்துதவுமாறு 3 ஆம் பிரிவின்கீழ் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்குக் கவனத்துட்கொள்ளப் படுகின்ற எவரேனுமாளைத் தேவைப்படுத்தலாம்.

(4) அமைச்சர், ஆணைக்குழு, வெற்றிடமொன்று ஏற்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதகாலத்திற்குள் ஆணையாளராக நியமிக்கப்படுவதற்கு ஆட்களின் பெயர்களை முன்னுரிமையின் வரிசைக்கிரமத்தில் அரசியலமைப்புப் பேரவைக்கு, அதன் ஒருப்பாட்டிற்காக அனுப்புதல் வேண்டும். அரசியலமைப்புப் பேரவையானது, ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்படவேண்டிய ஆட்கள் தொடர்பாக அது ஒருப்படுகின்றவிடத்து, எந்தத் தேதிக்குமுன்னர் அத்தகைய நியமனங்களைச் செய்வதற்கு அமைச்சர் தேவைப்படுத்தப்படுகின்றாரோ அந்தத் தேதிக்கு ஆகக்குறைந்தது ஒரு மாதத்துக்கு முன்னரேனும் அதன் ஒருப்பாட்டை அமைச்சருக்குத் தெரிவித்தல் வேண்டும்.

ஆணைக்குழுவினது உறுப்பினர்களின் தகைமைகள் முதலியன.

**5.** (1) ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், ஆற்றலும் நேர்மையும் கொண்டவர்களும், எந்திரவியல், சட்டம், பொருளியல், தொழில் முகாமை, கணக்கியல் அல்லது நிருவாகம் என்பன தொடர்பான பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதில் திறமை காட்டியுள்ளவர்களுமான ஆட்களாக இருத்தல் வேண்டும்.

(2) ஆளொருவர் –

(அ) இலங்கைப் பிரசையாக அவர் இல்லாதிருந்தால் ; அல்லது

(ஆ) ஒரு குற்றவியல் தவறுக்கு அவருக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தால் ; அல்லது

(இ) பொறுப்பு விடுவிக்கப்படாத வங்கி முறிந்தவராக அவர் இருந்தால் அல்லது இருந்திருந்தால் அல்லது அவரது கடன்கொடுத்தோருடன் ஏதேனும் ஒழுங்கைச் செய்திருந்தால் ; அல்லது,

(ஈ) நியமிக்கப்படுவதற்கான அவரது பெயர் நியமனத்துக்கு முன்னர் மூன்றாண்டுகளினுள் பாராளுமன்றத்தின் உறுப்பினரொருவராக அவர் இருந்தால் அல்லது இருந்திருந்தால் ; அல்லது

(உ) ஒரு மாகாணசபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகார சபையின் உறுப்பினரொருவராக அவர் இருந்தால் அல்லது இருந்திருந்தால் ; அல்லது

(ஊ) பாராளுமன்றத் தேர்தல்களின் நோக்கங்களுக்காக ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் அரசியற் கட்சியில் ஏதேனும் பதவியை அவர் வகித்தால் ; அல்லது,

(எ) ஏதேனும் பொதுப்பயன்பாட்டுத் தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற ஏதேனும் கம்பெனியில் அல்லது பொறுப்புமுயற்சியில், நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல், முரண்பாடாக அமைகின்ற ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையை அவர் அல்லது தொடர்புடைய ஆளொருவர் கொண்டிருந்தால்,

ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்.

ஆணைக்குழுவினது உறுப்பினர்கள் பதவி நீங்குதலும், அகற்றப்படுதலும், அவர்களது பதவிக்காலமும்.

**6.** (1) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர், அதற்கென அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின்மூலம் பதவியிலிருந்து நீங்கலாம் என்பதுடன், அத்தகைய பதவிநீங்குகையானது, எத்தேதியன்று அப்பதவி நீங்குகை அமைச்சரினால் எழுத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து பயனுடையதாதல் வேண்டும்.

(2) அமைச்சரானவர், ஆணைக்குழுவின் உறுப்பினரொருவரை, 7 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள நடவடிக்கைமுறையுடன் இணங்கியொழுகிய பின்னர், (சமுகமளிக்காதோருட்பட) பாராளுமன்றத்தின் மொத்த எண்ணிக்கையினரான உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரினால் அனுசரணையளிக்கப்படும் உரையொன்று பாராளுமன்றத்தின் ஆணைக்குழுவின் உறுப்பினரொருவை அகற்றுவதற்காக அமைச்சருக்கு முன்வைக்கப்பட்டுள்ள பின்னர், அவ்வாறு பதவியலிருந்து அகற்றலாம்.

(3) ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினரது பதவிக்காலம், நியமனத் தேதியிலிருந்து ஐந்தாண்டுகளாதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், ஆணைக்குழுவின் முதலாவது உறுப்பினர்கள், தவிசாளராக நியமிக்கப்படும் உறுப்பினர் தவிர, அமைச்சர் தீர்மானிக்கவேண்டியவாறு, முறையே நான்காண்டு, மூன்றாண்டு, இரண்டாண்டு மற்றும் ஓராண்டுக் காலப்பகுதிகளுக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(4) இறப்பின்மூலம், பதவிநீங்குகைமூலம் அல்லது வேறு காரணத்துக்காக ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர் பதவியை வறிதாக்குமிடத்து, அமைச்சர் அரசியலமைப்புப் பேரவையின் ஒருப்பாட்டுடன், 5 ஆம், 7 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளைக் கவனத்துட்கொண்டு, அவரது இடத்தில் பொருத்தமான இன்னுமோர் ஆளை நியமித்தல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு நியமிக்கப்படும் ஆள், அவர் எந்த உறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலங்களுள் எஞ்சியுள்ளவற்றுக்குப் பதவிவகித்தலும் வேண்டும்.

(5) அகற்றுகை மூலமல்லாது வேறுவகையாக ஆணைக்குழுவின் எந்த உறுப்பினரின் பதவிக்காலம் முடிவுறவுள்ளதோ அந்த உறுப்பினர், (அடுத்துவருகின்ற அல்லது வேறுவகையான) ஒரு மேலதிகப் பதவிக்காலத்துக்கு மேற்படாமல் மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(6) பாராளுமன்றத்தின் தீர்மானமொன்றின்மூலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேதியம் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன்,

அத்தகைய ஊதியமானது ஆணைக்குழுவின் நிதியத்துக்குப் பொறுப்பிக்கப்படுதலும் வேண்டும். ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், அவரவரது நியமனக் கடிதங்களின் நியதிநிபந்தனைகளுக்கிணங்க பகுதிநேர அடிப்படையொன்றில் ஆணைக்குழுவின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(7) ஆளொருவர், ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக அவர் இல்லாதொழிகின்ற பின்னர் மூன்றாண்டு காலப்பகுதிக்கு, ஆணைக்குழுவின் தத்துவங்களையும், கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும் புரிதலும் அத்துடன் நிறைவேற்றுவதிலும் அவரினாற் பெறப்படும் தகவலை அவர் பயன்படுத்துவதற்கு அல்லது வெளியிடுவதற்கு ஆளாகவிருக்கக்கூடிய விடத்து, இலங்கையில் ஏதேனும் பதவியை, ஊழியத்தை, ஆலோசனை ஒழுங்கை அல்லது தொழிலை, நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ பெறுதல், வகித்தல் அல்லது கொண்டுநடாத்துதல் ஆகாது என்பதுடன், அத்தகைய ஏதேனும் அக்கறைகளை அவர் விடுப்பாற்றலுக்குட்படாமல் அல்லது அடுத்துறுகை என்றவகையாக அல்லது இறுதிவிருப்பாவணக் கையளிப்பு என்றவகையாகப் பெற்றால், அவர், அத்தகைய அக்கறையைப் பெற்றதிலிருந்து இரண்டு மாதங்களினுள் அத்தகைய அக்கறையை உரிமை துறத்தலும் வேண்டும்.

உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைமுறை.

7. அமைச்சர், ஆணைக்குழுவின் உறுப்பினரொருவரை —

(அ) பின்வரும் ஏதுக்களுள் ஏதேனும் ஒன்றின்மீது அல்லது அதற்கு மேற்பட்டவற்றின்மீது அவ்வுறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கு உத்தேசிக்கப்படுகின்றதென அமைச்சர் அத்தகைய உறுப்பினருக்கான அறிவித்தலொன்றை, அகற்றுகைக்கு உத்தேசிக்கப்படும் ஏதுக்கள் தொடர்பான முழு விபரங்களுடனும் சேர்த்து அனுப்பியிருப்பதுடன், உத்தேசிக்கப்படும் அகற்றுகைக்கெதிராக முறையீடுகளைச் செய்வதற்கு உறுப்பினருக்கு வாய்ப்பொன்றை அளித்திருந்தாலொழியவும் அதாவது,

அவர் –

(i) பொறுப்புவிடுவிக்கப்படாது வங்கிமுறிந்தவராகவுள்ளாரென்று அல்லது அவரது கடன் கொடுத்தோருடன் ஏதேனும் ஒழுங்கைச் செய்துள்ளாரென்று ; அல்லது

(ii) இலங்கையில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீனமற்றவரெனக் காணப்பட்டுள்ளாரென்று அல்லது வெளிப்படுத்தப்பட்டுள்ளாரென்று ; அல்லது

(iii) ஓர் உறுப்பினராகத் தொடர்ந்திருப்பதற்குத் தகைமையில்லாதொழிந்துள்ளாரென்று அல்லது ஓர் உறுப்பினராகத் தொடர்ந்திருப்பதற்குத் தகைமையிழந்தவராகவுள்ளாரென்று ; அல்லது

(vi) மூன்று மாதங்களுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட காலத்துக்கு அவரது பணிகளை நிறைவேற்றுவதற்குத் தவறியுள்ளாரென்று ; அல்லது

(v) துர்நடத்தைக்கு குற்றவாளியாகவுள்ளாரென்று ;

(ஆ) அமைச்சர், உறுப்பினரால் செய்யப்படும் எவையேனும் முறையீடுகளைக் கவனத்துட்கொண்டு, உறுப்பினருக்கு அனுப்பப்படும் அறிவித்தலில் குறித்துரைக்கப்படும் ஏதுக்களின்மீது உறுப்பினரின் உத்தேசிக்கப்படும் அகற்றுகை நீதியானதெனப் பாராளுமன்றத்துக்கு அறிக்கையிட்டு, அறிக்கையுடன் சேர்த்து உறுப்பினரால் செய்யப்படும் முறையீடுகளைப் பாராளுமன்றத்துக்கு அறிவித்திருந்தாலொழியவும் ;

(இ) பாராளுமன்றமானது அமைச்சரின் அறிக்கையையும் உறுப்பினரால் செய்யப்படும் முறையீடுகளையும் கவனத்துட்கொண்டு, அத்தகைய அகற்றுகைக்காக,

(சமுகமளிக்காதோருட்பட) பாராளுமன்றத்தின் உறுப்பினர்களினது மொத்த எண்ணிக்கையின் பெரும்பான்மையோரினால் அனுசரணையளிக்கப் படும் உரையொன்றை நிறைவேற்றியிருந்தாலொழியவும்,

பதவியிலிருந்து அகற்றுதலாகாது.

ஆணைக்குழுவின் தவிசாளர்.

**8.** (1) இதனகத்துப்பின்னர் "தவிசாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும் ஆணைக்குழுவின் தவிசாளராகவிருப்பதற்கென அமைச்சர் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுள் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(2) தவிசாளரானவர், அதற்கென அமைச்சருக்கு முகவரியிட்டனுப்படும் கடிதத்தின்மூலம் தவிசாளர் பதவியிலிருந்து நீங்கலாம் என்பதுடன், அந்தப் பதவிநீங்கலானது, அமைச்சரினால் அது எத்தேதியன்று எழுத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து பயனுடையதாதல் வேண்டும்.

(3) தவிசாளரானவர் 6 ஆம் பிரிவின்கீழ் ஆணைக்குழுவின் உறுப்பினரென்ற பதவியிலிருந்து அகற்றப்பட்டால் தவிசாளராக இல்லாதொழிதல் வேண்டும்.

(4) தவிசாளரின் பதவிக்காலம் ஐந்தாண்டுகளாதல் வேண்டும்.

(5) தவிசாளரானவர், தவிசாளரென்ற பதவியை வறிதாக்குவதன்மேல், தவிசாளராக மீள நியமிக்கப்படுவதற்குத் தகைமையுடையவராதலாகாது.

(6) ஏழாம் பிரிவின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, தவிசாளர், அவரது நியமனத்திலிருந்து ஒரு மாதத்தினுள், அவர் சுகவீனம் காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காக அலுவலகத்துக்கு வருகைதராதபோது தவிசாளரின் பணிகளை நிறைவேற்றுவதற்கெனப் பிரதித் தவிசாளராக இருப்பதற்கு உறுப்பினரொருவரை எழுத்தில் பெயர்குறித்து நியமித்தல் வேண்டும்.

ஆணைக்குழுவின் கூட்டங்கள்.

**9.** (1) தவிசாளரானவர் ஆணைக்குழுவின் எல்லாக் கூட்டங்களையும் கூட்டுதல் வேண்டும். ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினர், எழுத்திலான அறிவித்தல்மூலம், ஆணைக்குழுவின் கூட்டமொன்றைக் கூட்டும்படி தவிசாளருக்கு வேண்டுகோள்

விடுக்கலாம் என்பதுடன், தவிசாளரானவர், நற்காரணத்துக்காகவன்றி வேறுவகையாக அவ்வாறு செய்வதற்கு மறுத்தலுமாகாது.

(2) ஆணைக்குழுவானது, அவசரமானதெனத் தவிசாளரால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் கருமத்தை உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரின் உடன்பாட்டுடன் முடிபுசெய்யலாம்.

(3) தவிசாளரானவர் ஆணைக்குழுவின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டுமென்பதுடன், ஏதேனும் கூட்டத்துக்குத் தவிசாளர் வருகைதராதிருக்கும்போது பிரதித் தவிசாளர் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குதலும் வேண்டும்.

(4) ஆணைக்குழுவின் கூட்டமொன்றுக்கான கூட்ட நடப்பெண், தவிசாளர் உட்பட மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும். தவிசாளர் வருகைதராதவிடத்து, கூட்ட நடப்பெண்ணானது பிரதித் தவிசாளர் உட்பட மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும்.

(5) ஆணைக்குழுவினால் முடிபுசெய்யப்படுவதற்கான எல்லாக் கருமங்களும், ஆணைக்குழுவின் உறுப்பினர்களினது பெரும்பான்மை வாக்குகளினால் முடிபுசெய்யப்படுதல் வேண்டும். ஏதேனும் கருமத்தின்மீது ஆணைக்குழுவின் உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரின் வாக்குகளினால் அனுசரணைப்படுத்தப்படும் முடிபானது, அக்கருமத்தின்மீது ஆணைக்குழுவின் முடிபாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) காரணங்களினால் ஆதாரப்படுத்தப்படும் ஆணைக்குழுவின் எல்லா முடிபுகளும் எழுத்திலிருத்தல் வேண்டுமென்பதுடன், 10 ஆம் பிரிவின் (இ) என்னும் பந்திக்கிணங்க ஆணைக்குழுவின் இலச்சினை அவற்றில் பொறிக்கப்படுதலும் வேண்டும்.

(7) ஆணைக்குழுவினால் முடிபு செய்யப்படவேண்டிய ஏதேனும் கருமத்தின்மீது வாக்குகள் சமமாகவுள்ள விடயத்தில் தவிசாளர் அறுதியிடும் வாக்கொன்றை உடையவராதல் வேண்டும்.

(8) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய, ஆணைக்குழுவானது, ஆணைக்குழுவின் கூட்டங்களும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதலும் தொடர்பான நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

(9) ஆணைக்குழுவின் செயல், முடிபு அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பாண்மையில் ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அதன் எவரேனும் உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதெனக் கருதப்படுதலாகாது.

ஆணைக்குழுவின் இலச்சினை.

10. ஆணைக்குழுவின் இலச்சினையானது —

(அ) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம் :

(ஆ) ஆணைக்குழு காலத்துக்குக்காலம் தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் :

(இ) ஆணைக்குழுவின் அனுமதியுடனன்றியும் ஆணைக்குழுவின் இரு உறுப்பினர்களின் சமூகத்திலன்றியும் ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது : அவர்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

## பாகம் III

## பணிப்பாளர் தலைமையதிபதி, பிரதிப் பணிப்பாளர்கள் தலைமையதிபதி, ஏனைய பணியாட்டொகுதியினர் என்போரை நியமித்தல்

ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியும் பிரதிப் பணிப்பாளர்கள் தலைமையதிபதியும்.

11. (1) ஆணைக்குழுவானது, அதன் முதலாவது உறுப்பினர்களை நியமித்ததிலிருந்து மூன்று மாதங்களினுள்ளும், அதன் பின்னர் வெற்றிடம் ஏற்படும்பொழுதெல்லாம், ஆணைக்குழுவின் பிரதான நிறைவேற்றலுவலராக இருக்கவேண்டிய, (இதனகத்துப்பின்னர் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியாகவிருப்பதற்கென ஆளொருவரை நியமித்தல்

வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதியின் ஊதியமுட்பட ஆணைக்குழுவானது அவரது தொழில் நிபந்தனைகளைத் தீர்மானித்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, அவசியமென அது கொள்ளுகின்றவாறு குறித்துரைக்கப்பட்ட கைத்தொழில் ஒன்றுக்கான பொறுப்புடன் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிரதிப் பணிப்பாளர்கள் தலைமையதிபதியை நியமிக்கலாம்.

(3) ஐந்தாம் பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளினதும் 6 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவினதும் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன், பணிப்பாளர் தலைமையதிபதியினதும் பிரதிப் பணிப்பாளர்கள் தலைமையதிபதியினதும் நியமனங்கள் தொடர்பாக ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதிக்கு, ஆணைக்குழுவின் பொதுவான பணிப்புக்கும், கட்டுப்பாட்டுக்கும் அமைய, ஆணைக்குழுவின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும், அதன் கடமைகளையும் பணிகளையும் புரிவதற்கும், ஆணைக்குழுவின் பணியாட்டொகுதியினரது நிருவாகத்துக்கும் கட்டுப்பாட்டுக்கும் தேவையான அதன் நாளாந்தச் செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துதல் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

(5) ஆணைக்குழுவானது, பணிப்பாளர் தலைமையதிபதி சம்பந்தமானவை தவிர்ந்த, அதன் பணியாட்டொகுதியினரின் நிருவாகமும் கட்டுப்பாடும் தொடர்பான அதன் முடிபுசெய்யும் தத்துவங்களை மட்டுமே பணிப்பாளர் தலைமையதிபதிக்குக் கையளிக்கலாம்.

(6) பணிப்பாளர் தலைமையதிபதி, ஆணைக்குழுவின் கூட்டங்களுக்கு வருகைதருதல் வேண்டும். எவ்வாறாயினும், அவர் தொடர்பான அல்லது அவரை அடுத்துறுபவரின் நியமனம் தொடர்பான ஏதேனும் கருமம்பற்றிக் கலந்துரையாடப்படும் அத்தகைய நேரத்தில் அவர் அக்கூட்டத்துக்கு வருகைதருதலாகாது. கூட்டங்களில் வாக்களிப்பதற்கு அவர் உரித்துடையவராதலாகாது.

(7) பணிப்பாளர் தலைமையதிபதி ஆணைக்குழுவின் அங்கீகாரத்தோடு, இப்பிரிவினால் அவருக்கு அளிக்கப்படும் கையளிப்புத் தத்துவம் தவிர, அவருக்குச் செல்லுபடியான முறையில் கையளிக்கப்பட்டுள்ள ஏதேனும் தத்துவத்தை, பணியை அல்லது கடமையைப் பிரதிப் பணிப்பாளர் தலைமையதிபதி ஒருவருக்கு அல்லது ஆணைக்குழுவின் எவரேனும் பணியாட்டொகுதியினருக்குக் கையளிக்கலாம் என்பதுடன், அத்தகைய பிரதிப் பணிப்பாளர் அல்லது பணியாட்டொகுதியினர், பணிப்பாளர் தலைமையதிபதியின் பொதுவான அல்லது குறிப்பான பணிப்புக்கிணங்க அத்தகைய தத்துவங்களைப் பிரயோகித்தலும், அத்தகைய பணிகளை நிறைவேற்றுதலும் கடமைகளைப் புரிதலும் வேண்டும்.

(8) விடயத்துக்கேற்ப (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் பணிப்பாளர் தலைமையதிபதியை அல்லது எவரேனும் பிரதிப் பணிப்பாளர் தலைமையதிபதியை ஆணைக்குழுவானது பதவியிலிருந்து அகற்றலாம்.

ஆணைக்குழுவின் பணியாட்டொகுதி.

**12.** (1) ஆணைக்குழுவானது —

(அ) பிறவற்றுடன், ஒரு கூட்டமைப்புச் செயலாளர் தன்மையில் செயலாற்ற செயலாளரொருவரை நியமித்தல் வேண்டும் ;

(ஆ) அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் அதன் பணிகளையும் கடமைகளையும் புரிவதற்கும் அவசியமென அது கருதுகின்றவாறான அத்தகைய வேறு பணியாட்டொகுதியினரை நியமிக்கலாம் ;

(இ) அத்தகைய பணியாட்டொகுதியினரைப் பதவியிலிருந்து விலக்கலாமென்பதுடன், அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டையும் பிரயோகிக்கலாம் ;

(ஈ) அத்தகைய பணியாட்டொகுதியினருக்கு எந்த வீதங்களில் ஊதியமளிக்கப்பட வேண்டுமோ அந்த வீதங்களை நிர்ணயித்தல் வேண்டும் ;

(உ) அத்தகைய பணியாட்டொகுதியினரின் சேவை நியதிநிபந்தனைகளைத் தீர்மானித்தல் வேண்டும் ; அத்துடன்

(ஊ) அத்தகைய பணியாட்டொகுதியினரின் நன்மைக்காகச் சகாய நிதியங்களை அல்லது திட்டங்களைத் தாபித்து ஒழுங்குபடுத்தலாம் என்பதுடன், ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து அத்தகைய நிதியங்களுக்கு அல்லது திட்டங்களுக்கு உதவுதொகைகளையும் அளிக்கலாம்.

(2) இப்பிரிவின் நோக்கத்துக்கு, பணியாட்டொகுதியினர் பணிப்பாளர் தலைமையதிபதியையும் பிரதிப் பணிப்பாளர்கள் தலைமையதிபதியையும் உள்ளடக்குதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்படும் எல்லாக் கருமங்களுக்காகவும் அல்லது அவற்றுள் எவற்றுக்காகவும் ஆணைக்குழுவானது விதிகளை ஆக்கலாம்.

**13.** (1) ஆணைக்குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும், ஆணைக்குழுவின் செயலாளர், பணிப்பாளர் தலைமையதிபதி, பிரதிப் பணிப்பாளர் தலைமையதிபதி (எவரேனுமிருப்பின்), அத்துடன் ஏனைய பணியாட்டொகுதியினர் என்போர், பதவியேற்கு முன்னர், அமைச்சரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும், அத்தகைய முறையிலும், அத்தகைய அதிகாரியின் முன்னிலையிலும் இரகசியம் பேணுவதற்கான வெளிப்படுத்துகையொன்றைக் கையொப்பமிடுதல் வேண்டும். ஆணைக்குழுவின் முகவர்களும், ஆலோசகர்களும், மதியுரையுநர்களும், அத்தகைய இரகசியம் பேணல் தேவைப்பாடுகளைக் கடைப்பிடிப்பதற்கு ஆணைக்குழுவினால் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும். அலுவலக முறை இரகசியம் பேணுதல்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரின் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஓரிலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற் றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற் றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

## பாகம் IV

### குறிக்கோள்களும், தத்துவங்களும், பணிகளும்

**14.** (1) ஆணைக்குழுவானது, இச்சட்டத்தின்கீழும் வேறேதேனும் தொழிற் சட்டத்தின்கீழும் ஆன அதன் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் நியாயத்துடனும், பாரபட்சமின்மையுடனும், சுதந்திரத்துடனும், நியாயமான வகையிலும், நேரத்துக்கு ஒத்ததும், வெளிப்படையானதும், புறவயமானதும் ஆணைக்குழுவின் குறிக்கோள்கள்.

அத்துடன் இச்சட்டத்துக்கும் அத்தகைய வேறு சட்டத்துக்கும் ஒத்ததாகவுள்ளவொரு முறையிலும், பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, ஆணைக்குழுவானது, பின்வருவனவற்றைச் செய்வதற்கு மிகச் சிறந்த வழியென அது கொள்ளுகின்றவொரு முறையில் இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ், அத்துடன் வேறேதேனும் தொழிற்சட்டத்தினால் அல்லது தொழிற் சட்டத்தின்கீழ் அதற்கு அளிக்கப்படும் அல்லது குறித்தளிக் கப்படும் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும் :-

(அ) எல்லாப் பாவனையாளர்களினதும் அக்கறைகளைப் பாதுகாத்தல் ;

(ஆ) போட்டியை மேம்படுத்துதல் ;

(இ) பொதுப்பயன்பாட்டுத் தொழில்களின் தொழிற்பாடு களிலும் அவற்றிலான மூலதன முதலீடுகளிலும் திறமையை மேம்படுத்துதல் ;

(ஈ) பொதுப்பயன்பாட்டுத் தொழில்களில் மூலவளங் களின் திறமையான குறித்தொதுக்கலொன்றை மேம்படுத்துதல் ;

(உ) பொதுப் பயன்பாட்டுத் தொழில்களில் காப்பையும் சேவைத்தரத்தையும் மேம்படுத்தல் ;

(ஊ) சாத்தியமானவிடத்து, பயன்பாட்டுச் சேவைகளைச் சர்வதேச நியமங்களை ஒப்புநோக்கி மதிப்புக் குறிப்பீடு செய்தல் ; அத்துடன்

(எ) திறமையாகச் செயலாற்றுகின்ற விலைக்கட்டுப் பாடுள்ள உருவகங்கள், தமது பொதுப்பயன்பாட்டுத் தொழில்களுக்கு நிதியளிப்பதில் தகாத கஷ்டத்துக்குட் படாதிருப்பதனை உறுதிப்படுத்துதல்.

தகவலைத் தேவைப்படுத்துவதற்கு ஆணைக்குழுவுக்குள்ள தத்துவங்கள்.

15. (1) ஆணைக்குழுவானது, அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு நியாயமான முறையில் தேவைப்படுகின்றவாறாகப் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட உருவகம் உட்பட, எவரேனுமாளுக்கு, ஆணைக்குழுவினால் தேவைப்படுத்தப்படுகின்றவையும் அவ்வாளின் கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டின்கீழ் உள்ளவையுமான ஏதேனும் தகவலை, எவையேனும் புத்தகங்களை, கணக்குகளை அல்லது வேறு ஆவணங்களைக் காலத்துக்குக்காலம், அல்லது ஆணைக்குழுவினால் தேவைப்படுத்தப்படுகின்றவாறும் தேவைப்படுத்தப்படுகின்றபோதும் ஆணைக்குழுவுக்குக் கொடுத்துதவும்படி வேண்டுகோள் விடுத்தல் ;

(ஆ) ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில், ஆணைக்குழுவின் முன்னருள்ள ஏதேனும் கருமம் தொடர்பாகச் சான்றளிக்கமுடியுமானவராக இருக்கக்கூடிய எவரேனுமாளை 18 ஆம் பிரிவின்கீழ் நடாத்தப்படும் பகிரங்கக் கேட்புக்கு வருகைதரும்படி கட்டளை விட்டழைத்தல்.

(2) இப்பிரிவின்கீழ் எந்த ஆளுக்குத் தகவலுக்கான வேண்டுகோளொன்று விடுக்கப்பட்டுள்ளதோ அந்த ஆள், அத்தகவலை, புத்தகங்களை, கணக்குகளை அல்லது வேறு ஆவணங்களை ஆணைக்குழுவுக்கு உரியவாறு கொடுத்துதவுதல் வேண்டும்.

(3) நியாயமான காரணமின்றி (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் எவரேனும் ஆளிடமிருந்து தேவைப்படுத்தப்படும் ஏதேனும் தகவலை, எவையேனும் புத்தகங்களை, கணக்குகளை அல்லது வேறு ஆவணங்களைக் கொடுத்துதவத் தவறுகின்ற எவரேனுமாள், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்க முறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும், தவறானது தொடர்ந்து புரியப்படும் தவறொன்றாக இருக்குமிடத்து, அத்தவறு தொடர்ந்துபுரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் ஐம்பதாயிரம் ரூபாவான மேலதிகக் குற்றப்பணத்துக்கும் ஆளாதலும் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், இப்பிரிவிற் குறிப்பீடுசெய்யப் பட்டுள்ள ஆளொருவர், நீதிமன்றமொன்றின் முன்னரான குடியியல் வழக்கு நடவடிக்கைகளில் எந்த ஆவணத்தைக் காண்பிப்பதற்கு அவரை வலுக்கட்டாயப்படுத்த முடியாதவராக இருக்குமோ அந்த ஆவணமொன்றைக் காண்பிப்பதற்கு அல்லது அத்தகைய எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் சான்றாக வளிப்பதற்கு எந்தத் தகவலைக் கொடுத்துதவுவதற்கு அவரை வலுக்கட்டாயப்படுத்த முடியாததாக இருக்குமோ அந்தச் சான்றைக் கொடுத்துதவுவதற்கு அவர் வலுக்கட்டாயப் படுத்தப்படுதலாகாது.

(4) ஐந்தாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய. —

(அ) இப்பாகத்தின் ஏற்பாடுகளுள் எவற்றின் கீழும் அல்லது அவற்றின் பயனைக்கொண்டு பெறப்பட்டுள்ளதும் :

(ஆ) எவரேனும் தனியாளின் அல்லது ஏதேனும் குறிப்பிட்ட தொழிலின் அலுவல்களுடன் தொடர்பு பட்டுள்ளதும் : அத்துடன்

(இ) அந்தரங்கமானதென அல்லது வர்த்தகரீதியில் சுணைப்புள்ளதென ஏற்பாடுசெய்யப்படும் நேரத்தில் எழுத்திற் கூறப்பட்டுள்ளதும்,

ஆன குறிப்பிட்ட ஏதேனும் தொழில் தொடர்பிலான ஏதேனும் தகவல், அந்தத் தனியாளின் ஆயுட்காலத்தின்போது அல்லது அத்தொழில் தொடர்ந்து கொண்டுநடாத்தப்படுகின்ற காலம் வரை, அந்த ஆளின் அல்லது தொழிலின் எழுத்திலான சம்மதமில்லாமல் ஆணைக்குழுவினால் வெளிவிடப்படலாகாது.

(5) (அ) நீதிமன்றமொன்றினால் தேவைப்படுத்தப்படுகின்ற : அல்லது

(ஆ) வெளிவிடுகையானது பொதுமக்கள் நன்மைக்காகத் தேவைப்படுகின்றதென ஆணைக்குழு அபிப்பிராயப்பட்டால் : அல்லது

(இ) இன்னோராளுக்குத் தகவலை வெளிவிடும்படி எந்த உரிமத்தின்கீழ் அல்லது அதன் பயனைக் கொண்டு உரிமங்கொளி தேவைப்படுத்தப்படு

கின்றாரோ அந்த உரிமத்தின் நிபந்தனையொன்றுக்கு இணங்கியொழுகுவதற்கு அதனை இயலச் செய்யும் நோக்கத்துக்காக அளிக்கப்படுகின்ற,

தகவலின் ஏதேனும் வெளிவிடுகைக்கு (4) ஆம் உட்பிரிவு ஏற்புடையதாதலாகாது.

இச்சட்டத்தின் நோக்கத்துக்காக, இலத்திரனியல் பதிவேடொன்றில் அடங்கியுள்ள ஒரு பத்திரத்தில் அச்சிடப்படுகின்ற கட்புல அல்லது காந்த வகையிலான ஊடகத்தில் களஞ்சியப்படுத்தப்படுகின்ற, பதியப்படுகின்ற அல்லது பிரதியெடுக்கப்படுகின்ற, எத்தகையனவுமான வழிவகைகள் மூலம் தயாரிக்கப்படுகின்ற ஏதேனும் தகவலும் ஓர் ஆவணமெனக் கருதப்படுதல் வேண்டும்.

**16.** இச்சட்டத்தினால் ஆணைக்குழுவுக்கு வெளிப்படையாக அளிக்கப்படும் தத்துவங்களுக்குப் பங்கமின்றி, ஆணைக்குழுவானது பின்வருவனவற்றைச் செய்வதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும் :— ஆணைக்குழுவின் பொதுவான தத்துவங்கள்.

(அ) பதின்மூன்றாம் பிரிவுக்கமைய, அதன் பணிகளை நிறைவேற்றுவதில் உதவி புரிவதற்கு அவசியமென அது கருதக்கூடியவாறான ஆலோசகர்களினது அல்லது மதியுரைஞர்களினது சேவைகளைக் காலத்துக்குக்காலம் ஈடுபடுத்துதலும் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து அத்தகைய ஆட்களுக்கு ஊதியமளித்தலும் ;

(ஆ) ஒழுங்குபடுத்தப்பட்ட உருவகங்களுடன் உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளுதலும் ;

(இ) அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதலும், வைத்திருத்தலும், அதனை விற்பனை செய்தலும், குத்தகைக்குக் கொடுத்தலும், ஈடுவைத்தலும், கொடுத்துமாற்றுதலும், அல்லது வேறுவகையாகக் கையாளுதலும் ;

(ஈ) அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளுதலும் ;

(உ) அதன் பணிகளைப் பயனுற நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய உரிமைகளையும் சிறப்பு உரிமைகளையும், உரிமங்களையும், அதிகாரங்களையும் கொள்ளுதலும் ;

(ஊ) கட்டணங்களை அறவிடுதலும் ; அத்துடன்

(எ) இச்சட்டத்தின்கீழும் வேறேதேனும் தொழில் சட்டத்தின்கீழும் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதன், புரிவதன் மற்றும் நிறைவேற்றுவதன் இடைநேர்விளைவான அல்லது அவற்றின் விளைவாந்தன்மையினவான அத்தகைய வேறெல்லாச் செயல்களையும் காரியங்களையும் பொதுவாகச் செய்தலும்.

ஆணைக்குழுவின் பணிகள்.

**17.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, ஆணைக்குழுவானது, ஏனைய காரியங்களுக்கிடையே —

(அ) இச்சட்டத்தினால் அல்லது அதன்கீழ் அல்லது ஏதேனும் தொழில் சட்டத்தினால் அல்லது அதன்கீழ் ஆணைக்குழுவுக்கு அளிக்கப்படும் அல்லது குறித்தளிக்கப்படும் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும் ;

(ஆ) ஆணைக்குழு தோதானதெனக் கருதுகின்ற அளவுக்கு, ஆணைக்குழுவின் முடிபுகளினால் பாதிக்கப்படும் அல்லது பாதிக்கப்படும் சாத்தியங்கொண்ட எவரேனுமாளை அல்லது குழுவைக் கலந்தாலோசித்தல் வேண்டும் ;

(இ) இச்சட்டத்தின் நோக்கினுள் அமைகின்ற ஏதேனும் தொழில் சம்பந்தமான எல்லாக் கருமங்களின்மீதும் ஆணைக்குழு தோதானதெனக் கருதுகின்றவாறாக அரசாங்கத்துக்கு மதியுரையளித்தல் வேண்டும் ;

(ஈ) எவையேனும் பொதுப்பயன்பாட்டுத் தொழில்கள் சம்பந்தமான தகவலை 15(4) ஆம் பிரிவுக்கமைய சேகரித்தலும், பதித்தலும், பரப்புதலும் வேண்டும் ;

(உ) ஆணைக்குழுவின் பணிகளை ஆளுகின்ற நற்செயல் முறை பற்றிய கோவையொன்றைக் கொண்டுள்ள ஒழுங்குபடுத்தற் கைந்நூலொன்றை அது தாபிக் கப்பட்டதிலிருந்து ஆறு மாதங்களினுள் தயாரித்தலும், தேவைப்படுகின்றவாறும் தேவைப்படுகின்றபோதும் அதனை மீளாய்வுசெய்தலும் வேண்டும் ;

(ஊ) ஏதேனும் தொழில் சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்படும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் உரிமமளித்தல், ஒழுங்குபடுத்துகை மற்றும் பரிசோதனைப் பணிகளைப் பிரயோகித்தல் வேண்டும் :

(எ) ஏதேனும் தொழிற் சட்டத்தின் அதிகாரத்தின்கீழ் வழங்கப்பட்ட உரிமங்களினதும், ஒப்பந்தங்களி னதும், ஏனைய சாதனங்களினதும் ஏற்பாடுகளை வலுவுறுத்தல் வேண்டும் :

(ஏ) ஏதேனும் தொழில் சட்டத்தினால் தேவைப்படுத் தப்படுமிடத்து, ஒழுங்குபடுத்தப்பட்ட உருவங்களி னால் அறவிடப்படும் இறுப்புகளையும் விதிப்பனவு களையும் ஒழுங்குபடுத்துதல் வேண்டும் ;

(ஐ) ஏதேனும் பொதுப்பயன்பாட்டுத் தொழிலில் எழுகின்ற பிணக்குகளை மத்தியஸ்தம் செய்வதன் மூலம் தீர்த்துவைத்தல் வேண்டும் ;

(ஒ) பொதுப்பயன்பாட்டுத் தொழில்களின் காப்பு, தரம், தொடர்ச்சி அத்துடன் நம்பகத்தன்மை தொடர்பாகத் தொழினுட்ப மற்றும் வேறு நியமங்களைத் தாபித்து வலுவுறுத்துதல் வேண்டும் ; அத்துடன்

(ஓ) ஆணைக்குழுவானது அதன் பணிகளுள் எவற்றையும் பயனுற நிறைவேற்றுவதற்குத் தோதானவையென அது கருதக்கூடிய அத்தகைய வேறு இடைநேர் விளைவான அல்லது துணைநிலையான செயற்பாடு களைப் பொறுப்பேற்றல் வேண்டும்.

பகிரங்கக்கேட்பு.

**18.** (1) ஆணைக்குழுவானது, இச்சட்டத்தினால் அல்லது அதன்கீழ் அல்லது வேறேதேனும் தொழில்சட்டத்தினால் அல்லது அதன்கீழ் குறித்தளிக்கப்படும் பணிகளை நிறைவேற்றுகையிலும், பொதுமக்களின் அக்கறைக்கு அவசியமென அது கருதுகின்றவிடத்தும், ஏதேனும் கருமத்தை நுண்ணாய்வு செய்வதற்கும் அல்லது தீர்த்துவைப்பதற்கெனப் பகிரங்கக் கேட்பொன்றை நடாத்தலாம். பகிரங்கக் கேட்பானது, இயற்கை நீதியின் நெறிகளுக்கு ஒவ்வாதனவாகவிராத ஏதேனும் முறையில் நடாத்தப்படுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்படும் பகிரங்கக் கேட்பொன்றின் நோக்கங்களுக்காக, பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) நாடிப்பெறுதலுக்கு அல்லது பரிசோதனை செய்வதற்கு அவசியமானதென அல்லது விரும்பத்தக்கதென ஆணைக்குழு எண்ணக்கூடியவாறாக, எழுத்திலான அல்லது வாய்மொழிமூலமான அத்தகைய எல்லாச் சான்றையும் நாடிப்பெறுதலும், அத்தகைய எல்லா ஆட்களையும் சாட்சிக்காரர்களாக விசாரணை செய்தலும் ;

(ஆ) எவரேனும் சாட்சிக்காரரின் (எழுத்திலான அல்லது வாய்மொழிமூலமான) சான்று சத்தியத்தின்மீது அல்லது உறுதியுரையின்மீது கொடுக்கப்படுவதனைத் தேவைப்படுத்துதலும், ஆணைக்குழுவினால் அதற்கென அதிகாரமளிக்கப்படும் அலுவலரொருவரினால் அத்தகைய ஒவ்வொரு சாட்சிக்காரருக்கும் ஒரு சத்தியத்தை அல்லது உறுதியுரையை எடுத்தோதலும் அல்லது எடுத்தோதுவித்தலும் ;

(இ) இலங்கையில் வதிகின்ற எவரேனுமாளை, சான்று கொடுப்பதற்கு அல்லது அவரது உடைமையிலுள்ள ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு பொருளைக் காண்பிப்பதற்கு ஆணைக்குழுவின் பகிரங்கக்

கேட்பொன்றுக்கு வருகைதரும்படி கட்டளைவிட்டழைத்தலும் அத்துடன் அவரைச் சாட்சிக்காரரொருவராக விசாரணை செய்தலும் அல்லது அவரது உடைமையிலுள்ள ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு பொருளைக் காண்பிக்கும்படி தேவைப்படுத்துதலும் ;

(ஈ) சான்றுக் கட்டளைச் சட்டத்தில் அடங்கியுள்ள ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், எழுத்திலான அல்லது வாய்மொழிமூலமான ஏதேனும் சான்றை ஏற்றுக் கொள்ளுதலும்.

(3) ஆணைக்குழுவின் முன்னர் கட்டளைவிட்டழைக்கப்பட்டுள்ள எவரேனுமாள் அல்லது ஆணைக்குழுவின் முன்னருள்ள ஏதேனும் கருமத்தினால் எந்த ஆளின் அக்கறைகள் பாதிக்கப்படும் சாத்தியமுள்ளதோ அந்த எவரேனுமாள் நேரடியாகவோ அல்லது அதிகாரமளிக்கப்படும் பிரதிநிதி மூலமாகவோ தோற்றலாம்.

(4) அத்தகைய பகிரங்கக் கேட்பில் சான்றுகொடுக்கும் ஆளொவ்வொருவரும், அத்தகைய சான்று தொடர்பில், சட்டநீதிமன்றமொன்றின் முன்னர் அவரினாற் கொடுக்கப்படும் சான்று தொடர்பில், அத்தகைய நீதிமன்றமொன்றின் முன்னர் சான்றுகொடுக்கும் சாட்சிக்காரரொருவர் எந்தச் சிறப்புரிமைகளுக்கு உரித்துடையவராகவுள்ளாரோ அந்த எல்லாச் சிறப்புரிமைகளுக்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

(5) அத்தகையவொரு பகிரங்கக் கேட்பிலான நடவடிக்கைகளுக்குப் பொதுமக்கள் அனுமதிக்கப்பட்டோராதல் வேண்டுமென்பதுடன் கொடுக்கப்படும் சான்றின் பதிவும் கவனத்துட்கொள்ளப்படும் எல்லா நிகழ்வுகளும் பற்றிய கூற்றொன்றும் ஆணைக்குழுவினால் வைத்திருக்கப்படுதலும் பொதுமக்களுக்குக் கிடைக்கக்கூடியனவாக்கப்படுதலும் வேண்டும்.

(6) ஆணைக்குழுவின் அதிகாரத்துக்கெதிராக, அல்லது அதற்கு அவமரியாதையாகப் புரியப்படும் ஒவ்வோர் அவமதிப்புத் தவறும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அதிகாரத்துக்கெதிராக அல்லது அதற்கு அவமரியாதையாகப் புரியப்பட்ட ஓர் அவமதிப்புத் தவறு என்றாற்போன்று, அந்நீதிமன்றத்தினால் தண்டிக்கப்படற்பாலதாதல் வேண்டுமென்பதுடன், மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அத்தகைய ஒவ்வொரு தவறையும் விளங்குவதற்கு இத்தால் நியாயாதிக்கம் உரித்தாக்கவும்படுகின்றது.

(7) ஆணைக்குழுவின் முன்னிலையிலேனும் அல்லது வேறுவகையாகவேனும் ஆணைக்குழு தொடர்பாகச் செய்யப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட செயலொன்று, அத்தகைய செயல், மேன்முறையீட்டு நீதிமன்றம் தொடர்பாகச் செய்யப்பட்டிருந்தால் அல்லது செய்யாதுவிடப்பட்டிருந்தால், அத்தகைய நீதிமன்றத்தின் அதிகாரத்துக்கெதிராக, அல்லது அதற்கு அவமரியாதையாகப் புரியப்பட்ட அவமதிப்புத் தவறொன்றாக அமைந்திருக்குமாயின், ஆணைக்குழுவின் அதிகாரத்துக்கெதிரான, அல்லது அதற்கு அவமரியாதையாகப் புரியப்பட்ட அவமதிப்புத் தவறொன்றாக அமைதல் வேண்டும்.

(8) (அ) ஆணைக்குழுவினால் வழங்கப்படும் அழைப்புக் கட்டளையிற் குறிப்பிடப்படும் நேரத்திலும் இடத்திலும் ஆணைக்குழுவின் முன்னர் தோன்றுவதற்குக் காரணமின்றித் தவறுகின்ற : அல்லது

(ஆ) சத்தியஞ்செய்வதற்கு அல்லது உறுதியுரை மொழிவதற்கு மறுக்கின்ற, அல்லது உரியமுறையில் சத்தியஞ்செய்திருந்து, அல்லது உறுதியுரை மொழிந்திருந்து ஆணைக்குழுவினால் விசாரணை செய்யப்பட்டுக்கொண்டிருக்கும் கருமங்கள் தொடர்பில் சட்டமுறையாக அவரிடம் கேட்கப்படும் ஏதேனும் கேள்விக்கு மறுமொழியளிப்பதற்குக் காரணமின்றி மறுக்கின்ற அல்லது தவறுகின்ற : அல்லது

(இ) அரசது உடைமையில் அல்லது தத்துவத்தில் உள்ளதும் ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில் ஆணைக்குழுவினால் விசாரணை செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் கருமத்தின் உண்மையை அறிவதற்கு அவசியமாகவுள்ளதுமான ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு பொருளை ஆணைக்குழுவுக்குக் காண்பிப்பதற்கு அல்லது காட்டுவதற்குக் காரணமின்றி மறுக்கின்ற, அல்லது தவறுகின்ற,

ஆளெவரும், ஆணைக்குழுவுக்கெதிரான அவமதிப்புத் தவறுக்கு அல்லது அதன் அதிகாரத்தை அவமரியாதை செய்கின்ற தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(9) ஒரு பகிரங்கக் கேட்பின்போது அல்லது அதன் முடிவில், ஆணைக்குழுவானது —

(அ) அதன் முன்னருள்ள கருமம் தொடர்பாக அல்லது அதன் பாகம் தொடர்பாக, கட்டளையொன்றை அல்லது அளிப்பொன்றை, அதற்கான காரணங்களுடன் ஆக்கலாம் அல்லது செய்யலாம், அல்லது பணிப்பொன்றை அதற்கான காரணங்களுடன் விடுக்கலாம் ;

(ஆ) அக்கருமம் அல்லது அதன் பாகம் அற்பத் தன்மைத்தானது அல்லது அலைக்கழிக்கும் தலைமைத்தானது அல்லது மேலும் வழக்கு நடவடிக்கைகள் பொதுமக்களுக்குள்ள அக்கறையின் நோக்கில் அவசியமற்றவை அல்லது விரும்பத்தகாதவை எனத் தோன்றினால், ஏதேனும் கருமத்தை அல்லது அக்கருமத்தின் பாகத்தைத் தள்ளுபடி செய்யலாம் அல்லது மேலதிகக் கேட்பை நடாத்தாதுவிடலாம், அல்லது அக்கருமத்தை அல்லது அதன் பாகத்தைத் தீர்த்துவைக்காதுவிடலாம் ;

(இ) அதன் முன்னர் உள்ள கருமத்தின் துரிதமான, நீதியான கேட்புக்கும் தீர்த்துவைத்தலுக்கும அவசியமானவாறான அல்லது உசிதமானவாறான அத்த

கைய எல்லாப் பணிப்புகளையும் பொதுவாக விடுக்கலாம் அத்துடன் அத்தகைய எல்லாக் காரியங்களையும் பொதுவாகச் செய்யலாம்.

(10) ஒன்பதாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியைப் பின்பற்றி ஆக்கப்படும் ஒவ்வொரு கட்டளையும் அல்லது செய்யப்படும் ஒவ்வோர் அளிப்பும் அத்துடன் விடுக்கப்படும் ஒவ்வொரு பணிப்பும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒவ்வொரு கட்டளையினதும், அளிப்பினதும் அல்லது பணிப்பினதும் பிரதியொன்று, பகிரங்கக் கேட்புக்கான ஒவ்வொரு தரப்பினருக்கும் சேர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

சட்டப் பிரச்சினையொன்றின்மீது மேன்முறையீடு செய்வதற்கமைய, 18 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கட்டளைகளின் இறுதியாந்தன்மை.

**19.** (1) பதினெட்டாம் பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் ஆக்கப்படும் கட்டளை, செய்யப்படும் அளிப்பு அல்லது விடுக்கப்படும் பணிப்பு ஒன்று, (2) ஆம் உட்பிரிவுக்கமைய இறுதியானதாதல் வேண்டும்.

(2) சட்டப்பிரச்சினை ஒன்றின்மீது 18 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கட்டளைக்கெதிராக, செய்யப்படும் அளிப்புக்கெதிராக அல்லது விடுக்கப்படும் பணிப்புக்கெதிராக எவரேனுமாளினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன் முறையீடொன்று செய்யப்படக்கூடியதாதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழான மேன்முறையீடொன்று எழுத்திலான மனுமூலம் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் —

(அ) கட்டளை, அளிப்பு அல்லது பணிப்பு எந்தக் கடிதத் தொடர்பு மூலம் மேன்முறையீட்டாளருக்கு அறிவிக்கப்பட்டதோ அந்தக் கடிதத்தொடர்பின் தேதிக்குப் பின்னர் முப்பது நாட்களினுள் ஆணைக்குழுவுக்கு முப்பிரதிகளில் முன்வைக்கப்படுதலும் வேண்டும் ;

(ஆ) ஆணைக்குழுவின் கட்டளையையும், அளிப்பையும் அல்லது பணிப்பையும் விவாதிக்கப்பட வேண்டிய சட்டப் பிரச்சினையையும் எடுத்துக்காட்டுதலும் வேண்டும் ;

(இ) அவசியமான எவரேனும் திறத்தவரை அத்தகைய மேன்முறையீட்டுக்கான பிரதிவாதியாக்குதலும் வேண்டும் ; அத்துடன்

(ஈ) ஆணைக்குழுவின் நிதியத்துக்குச் செலுத்தப்பட வேண்டியதான ஆயிரம் ரூபாக் கட்டணத்துடன் சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்படும் முறையிலும் அக்காலத்தினுள்ளும் மேன்முறையீட்டு மனுவொன்று ஆணைக்குழுவுக்கு முன்வைக்கப்படுமிடத்து, ஆணைக்குழுவானது —

(அ) மனுவின் பிரதியொன்றையும், மனுவிற் குறிப்பீடு செய்யப்படும் கட்டளை, அளிப்பு அல்லது பணிப்பு எந்த நடவடிக்கைகளில் ஆக்கப்பட்டதோ, செய்யப்பட்டதோ அல்லது விடுவிக்கப்பட்டதோ அந்த நடவடிக்கைகளின் பதிவேட்டையும் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அனுப்புதல் அல்லது அனுப்புவித்தல் வேண்டும் ;

(ஆ) மேன்முறையீட்டு மனுவில் பெயர் குறிப்பிடப்படும் பிரதிவாதிக்கு மேன்முறையீட்டு அறிவித்தலையும் அம்மனுவின் பிரதியொன்றையும் வழங்குதல் அல்லது வழங்குவித்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) மனுவின் பிரதியொன்றைப் பதிவேட்டில் கோப்பிடுதல் அல்லது கோப்பிடுவித்தல் வேண்டும்.

(5) மேன்முறையீட்டு நீதிமன்றம், அத்தகைய சட்டப் பிரச்சினையை தீர்மானிப்பதில், ஆணைக்குழுவின் கட்டளையை, அளிப்பை அல்லது பணிப்பை உறுதிப்படுத்தலாம், வேறுபடுத்தலாம் அல்லது ஒழிக்கலாம் அல்லது நேர்தானவையெனக் கருதப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளுடன் சட்டப் பிரச்சினையின் மீது அந்நீதிமன்றத்தின் முடிபுடன் சேர்த்து அக்கருமத்தை ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கலாம்.

**20.** ஆணைக்குழுவினால் ஆக்கப்படும், செய்யப்படும், விடுவிக்கப்படும் அல்லது அதன் கட்டுக்காப்பிலுள்ள ஏதேனும் விதியின், கட்டளையின், அளிப்பின், பணிப்பின் அல்லது வேறு ஆவணத்தின் பிரதியாகவுள்ளதும், அதன் உண்மையான ஆவணங்களின் சான்று.

பிரதியெனத் தவிசாளரினால் அத்தாட்சிப்படுத்தப்படுகின்றது மான பிரதியொன்று, எந்நீதிமன்றத்திலும், தவிசாளரின் கையொப்பத்துக்கான எண்பிப்பின்றி, அவ்விதியின், கட்டளையின், அளிப்பின், பணிப்பின் அல்லது வேறு ஆவணத்தின் சான்றாதல் வேண்டும்.

ஒரு கட்டளையை, அளிப்பை அல்லது, பணிப்பை மீறுதல்.

**21.** சட்டமுறையான அதிகாரமின்றி, ஆணைக்குழுவின் ஒரு கட்டளையை, அளிப்பை அல்லது பணிப்பை மீறுகின்ற அல்லது அதற்கிணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனுமாள், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறைவிளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், பத்துலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும், அத்தவறானது தொடர்ந்து புரியப்படும் தவறொன்றாக உள்ளவிடத்து அத்தகைய மீறுகை தொடர்ந்து புரியப்படுகின்ற ஒவ்வொரு நாளுக்கும் ஐந்து இலட்சம் ரூபாவான மேலதிகக் குற்றப்பணத்துக்கும் ஆளாதலும் வேண்டும்.

## பாகம் V

### போட்டி

ஆணைக்குழுவின் போட்டிப் பணிகள்.

**22.** ஆணைக்குழுவானது, ஒவ்வொரு பொதுப்பயன்பாட்டுத் தொழில் தொடர்பாகவும், எதிர்ப் போட்டி வழக்கங்களையும், ஏகபோகவுரிமைகளையும், தலையாய நிலையைக் கொள்ளுதலையும், துர்ப்பிரயோகங்களையும், அத்துடன் ஒன்றிணைவு நிலைமைகளையும் ஒழுங்குபடுத்துதலும் அவைபற்றி விசாரணை செய்தலும் வேண்டும் என்பதுடன், ஒன்றில் அதன் சொந்தப் பிரேரணையின்மீது அல்லது எவரேனுமாளினால் அதற்குச் செய்யப்படுகின்ற ஒரு முறைப்பாட்டின்மீது அல்லது வேண்டுகோளின்மீது, பின்வருவனவற்றை அறியவருவதன்மீது, பாதிக்கப்படும் அல்லது பாதிக்கப்படும் சாத்தியங்கொண்ட ஏதேனும் ஒழுங்குபடுத்தப்பட்ட உருவகத்தினதும், முறைப்பாட்டாளரினதும், தாபிக்கப்படும் பாவனையாளர் ஆலோசனைக் குழுவினதும் கலந்தாலோசனையுடன், பின்வருவன தொடர்பிலான நுண்ணாய்வொன்றையும் நிறைவேற்றலாம் :—

(அ) எவையேனும் எதிர்ப்போட்டி வழக்கங்களின் உள்ளமை அல்லது ஐயப்படும் உள்ளமை ;

(ஆ) ஒழுங்குபடுத்தப்பட்ட உருவகமொன்று எந்தச் சந்தைகளில் தொழிற்படுகின்றதோ அந்த சந்தைகளுள் ஒன்றில் அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் உள்நாட்டு வியாபாரத்தை அல்லது பொருளாதார அபிவிருத்தியை பாதிக்கக்கூடிய தலையாய நிலையை கொள்ளுகை அந்நிலையின் துர்ப்பிரயோகம் உள்ளமை அல்லது ஐயப்படும் உள்ளமை ; அல்லது

(இ) ஓர் ஒன்றிணைவு நிலைமை உருவாக்கம் அல்லது ஐப்படும் உருவாக்கம்.

ஆணைக்குழுவின் போட்டிப் பணிக்கான கட்டளைக் கூற்றுக்கள்.

**23.** (1) இருபத்திரெண்டாம் பிரிவின் நோக்கங்களுக்காக உள்நாட்டு அல்லது சர்வதேச வியாபாரத்தைப் பாதிக்கின்றதும் அல்லது பாதிக்கும் சாத்தியங்கொண்டதும், அதன் குறிக்கோள் அல்லது பயன் இலங்கையில் போட்டியைத் தடுத்தல், மட்டுப்படுத்தல் அல்லது புரட்டுவதாகவிருக்கின்றதுமான, —

(அ) (i) ஒழுங்குபடுத்தப்பட்ட ஓர் உருவகத்தை உட்படுத்துகின்ற எழுத்திலான, வாய்மொழி மூலமான அல்லது நடத்தை மூலமான, ஏதேனும் உடன்படிக்கை ;

(ii) ஒன்றாகச் செயலாற்றுகின்ற ஒழுங்குபடுத்தப்பட்ட உருவகங்களால் ஆன ஏதேனும் முடிபு ; அல்லது

(iii) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒழுங்குபடுத்தப்பட்ட உருவகங்களின் ஏதேனும் வழக்கம் அல்லது நடத்தை,

எதிர்ப்போட்டி வழக்கமாக அமைதல் வேண்டும் ;

(ஆ) 23 (1) (அ) என்னும் பிரிவின் ஏற்பாடுகள், குறிப்பாக —

(i) கொள்வனவு அல்லது விற்பனை விலைகளை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் நிர்ணயிக்கின்ற ;

(ii) ஒரு சந்தையிலுள்ள போட்டியாளரை ஒழித்துக்கட்டுகின்ற அல்லது பெருமளவில் சேதப்படுத்துகின்ற ;

(iii) போட்டியாளரொருவர் சந்தையொன்றினுள் பிரவேசிப்பதனைத் தடுக்கின்ற ;

(iv) ஒரு சந்தையில் போட்டியுள்ள நடத்தையில் ஈடுபடுவதிலிருந்து ஆளொருவரைத் தடைசெய்கின்ற அல்லது தடுக்கின்ற ; அல்லது

(v) ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட உருவகத்தைப் பாவனையாளரொருவர் அணுகுவதை அல்லது அதற்கு அல்லது அதிலிருந்து மாறுவதற்கான ஆற்றலைத் தகாத முறையில் வரையறுக்கின்ற அல்லது கட்டுப்படுத்துகின்ற.

உடன்படிக்கைகளுக்கும், முடிடுகளுக்கும், வழக்கங்களுக்கும் அல்லது நடத்தைக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(இ) (i) அதே ஆளினால் ; அல்லது

(ii) தொடர்புபட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுக்கள் உட்பட, ஆட்கள் குழுவொன்றின் உறுப்பினர்களால்,

ஒரு பயன்பாட்டு வலையமைப்பின் விதித்துரைக்கப்படும் நாற்றுவீதம் பயன்படுத்தப்பட்டாலோ, ஏற்பாடு செய்யப்பட்டாலோ அல்லது பயன்பாட்டுச் சேவையின் விதித்துரைக்கப்படும் நாற்றுவீதம் ஏற்பாடு செய்யப்பட்டாலோ அல்லது அவர்களுக்கு வழங்கப்பட்டாலோ தலையாய நிலையொன்று உள்ளதெனக் கொள்ளப்படுதல் வேண்டும் :

(ஈ) நடத்தையானது, குறிப்பாக —

(i) நியாயமற்ற கொள்வனவு அல்லது விற்பனை விலைகளை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் விதிக்கின்றதாக அமையுமாயின் ;

(ii) ஒரு சந்தையிலுள்ள போட்டியாளரொருவரை ஒழித்துவிடின் அல்லது பெருமளவு சேதப்படுத்துவதாயின் :

(iii) ஒரு போட்டியாளர் சந்தையொன்றினுட் பிரவேசிப்பதனைத் தடுப்பின் :

(iv) ஒரு சந்தையில் போட்டியுள்ள நடத்தையில் ஆளொருவர் ஈடுபடுவதைத் தடைசெய்யின் அல்லது தடுப்பின் : அல்லது

(v) ஒழுங்குபடுத்தப்பட்ட உருவகங்களைப் பாவனையாளரொருவர் அணுகுவதனை அல்லது அவற்றுக்கு அல்லது அவற்றிலிருந்து மாறுவதற்கான ஆற்றலைப் தகாத முறையில் வரையறுக்கின்றதாயின் அல்லது கட்டுப்படுத்துகின்றதாயின்,

தலையாய நிலையொன்றின் துர்ப்பிரயோகமாக அமையலாம்.

(உ) கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்று உட்பட ஆளொருவர், வேறெவரேனுமாளின் கட்டுப்பாட்டில் மாற்றத்தை விளைவிக்கின்ற அல்லது விளைவிக்கக்கூடிய, அந்த வேறு ஆளின் எவையேனும் பங்குகளை அல்லது சொத்துக்களை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் கொள்ளுதல் செய்தால் அல்லது கொள்ளுவதற்கு உத்தேசித்தால் ஒன்றிணைவு நிலைமையொன்று உள்ளதாகக் கொள்ளப்படுதல் வேண்டும் : அதாவது —

(i) இதன் குறிக்கோள் அல்லது பயன் என்னவெனில், ஒன்றாக எடுத்துக்கொள்ளப்படும் ஆட்கள், ஏதேனும் பொதுப் பயன்பாட்டுத் தொழிலில் சந்தையொன்றில் தலையாய நிலையொன்றில் இருக்கின்றனர் அல்லது இருக்கும் சாத்தியம் கொண்டுள்ளனர் அல்லது இருப்பார்கள் என்பதாகும் : அல்லது

(ii) மேலே (i) இலுள்ள சூழ்நிலைகள் திருப்தி செய்யப்படாவிடினுங்கூட அதே புவியியல்சார் பிரதேசங்களில் அல்லது வெவ்வேறு புவியியல்சார் பிரதேசங்களில் ஒரு பொதுப் பயன்பாட்டுத்

தொழிலில் உள்ள அதே பயன்பாட்டு வலையமைப்பை அல்லது பயன்பாட்டுச் சேவையை வழங்குவதில் ஆட்கள் இருவரும், புறம்பாகவோ அல்லது வேறுவகையாக ஈடுபட்டுள்ளவிடத்தும் அதனுள் தலையாய நிலையொன்றை வகிக்கின்றவிடத்தும் ;

(ஊ) நுண்ணாய்வு செய்வதற்கு ஆணைக்குழுவுக்குத் தத்துவமளிக்கப்பட்டுள்ள, 22 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள செயற்பாடுகளின் நோக்கெல்லைக்குள் அது அடங்கலாமென அபிப்பிராயப்படும் அல்லது நியாயமான முறையில் அபிப்பிராயப்பட வேண்டிய ஏதேனும் ஒழுங்குபடுத்தப்பட்ட உருகைம் ஆணைக்குழுவுக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(2) இப்பிரிவில் –

"கட்டுப்பாடு" என்பது, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வேறு ஆட்களை முழுமையாக அல்லது பகுதியளவில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் கட்டுப்படுத்துதல் என்று பொருளாகும் ;

"பயன்பாட்டு வலையமைப்பு" என்பது, பயன்பாட்டுச் சேவைகளை வழங்குவதற்காக, ஏதேனும் தொழில் சட்டத்தில் எவ்வாறாயினும் வரையிலக்கணங் கூறப்படும் ஒரு வலையமைப்பு அல்லது முறைமை என்று பொருளாகும் ; அத்துடன்

"பயன்பாட்டுச் சேவைகள்" என்பது, பொதுப் பயன்பாட்டுத் தொழில்களில் பண்டங்களை அல்லது சேவைகளை வழங்குதல் என்று பொருளாகும்.

ஆணைக்குழுவின் போட்டி விலக்களிப்புத் தத்துவங்கள்.

**24.** (1) எதிர்ப்போட்டி வழக்கம் அல்லது ஒன்றிணைவு நிலைமையொன்று உள்ளது, ஆனால் அது பொதுமக்களின் அக்கறைக்கெதிராகத் தொழிற்படவில்லை அல்லது தொழிற்படும் சாத்தியங் கொண்டிருக்கவில்லை என ஆணைக்குழுவானது நுண்ணாய்வின்மீது திருப்திப்படுமிடத்து, ஆணைக்குழு, கட்டளைமூலம், அவசியமானவையென அல்லது உசிதமானவையென அது கருதக் கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, அந்த எதிர்ப்போட்டி வழக்கத்துக்கு அல்லது ஒன்றிணைவு நிலைமைக்கு அதிகாரமளித்தல் வேண்டும்.

(2) தலையாய நிலையொன்றுள்ளது. ஆனால் அத்தலையாய நிலையின் துர்ப்பிரயோகம் எதுவும் இல்லையென ஆணைக்குழுவானது நுண்ணாய்வின்பின்பு திருப்திப்படுமிடத்து, ஆணைக்குழு, கட்டளை மூலம் அவசியமானதெனவோ அல்லது உசிதமானதெனவோ அது கருதக்கூடியவாறான அத்தகைய நடைமுறைகளுக்கமைய, தலையாய நிலையொன்றின் துர்ப்பிரயோகம் எதுவும் ஏற்படவில்லையென வெளிப்படுத்துதல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவானது, நுண்ணாய்வின்பின்பு —

(அ) ஒன்றிணைவு நிலைமையொன்றுள்ளது, அது பொதுமக்களின் அக்கறைக்கெதிராகத் தொழிற்படும் சாத்தியங்கொண்டது, அத்துடன் ஒன்றிணைவொன்று இன்னமும் இடம்பெறவில்லை எனத் திருப்திப்படுமிடத்து, ஆணைக்குழுவானது கட்டளை மூலம் ஒன்றிணைவு நிலைமையைத் தடை செய்யலாம்;

(ஆ) பந்தி (அ)வின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, எதிர்ப்போட்டி வழக்கம் அல்லது ஒன்றிணைவு நிலைமையொன்று உள்ளது எனவும் அது பொது மக்களின் அக்கறைக்கெதிராகத் தொழிற்படுகின்றது எனவும், அல்லது தலையாய நிலையொன்றின் துர்ப்பிரயோகம் உள்ளது எனவும் திருப்திப் படுமிடத்து, ஆணைக்குழுவானது, கட்டளை மூலம் பின்வருவனவற்றுக்கு ஏற்பாடு செய்யலாம் :

(i) அக்கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகளின்படியும் அத்தகைய தத்துவங்களுடனும் ஏதேனும் செயற்பாட்டைத் தொடர்வதற்கு அல்லது அத்தகைய நடாத்துகையை மேற்பார்வை செய்வதற்கு அல்லது ஏதேனும் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு என ஓர் ஆளை நியமிப்பதன்மூலம் அத்தகைய செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துதல் அல்லது அத்தகைய சொத்துக்களைப் பாதுகாத்தல் ;

(ii) அக்கட்டளையிற் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் ஏதேனும் எதிர்ப் போட்டி வழக்கத்தை அல்லது ஒரு தலையாய நிலையின் துர்ப்பிரயோகத்தை முடிவுறுத்தல், அல்லது ஒன்றிணைவு நிலைமையொன்றில் ஒன்றிணைவுக் களைவைச் செய்தல் ; அத்துடன்

(iii) ஆணைக்குழு அவசியமானவை அல்லது உசிதமானவையெனக் கருதக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, விளைகின்ற பாதகமான தாக்கங்களைப் பரிகரிக்கும் அல்லது தடுக்கும் நோக்கத்துக்காக அச்சூழ் நிலைகளில் ஆணைக்குழு அவசியமெனக் கருதக்கூடியவாறன அத்தகைய நடவடிக் கையை எடுத்தல்.

(4) எதிர்ப்போட்டி வழக்கமொன்று அல்லது ஒன்றிணைவு நிலைமையொன்று பொதுமக்களின் அக்கறைக்கெதிராகத் தொழிற்படுகின்றதா அல்லது தொழிற்படும் சாத்தியங் கொண்டுள்ளதாவென்பதை இப்பிரிவின் நோக்கத்துக்காகத் தீர்மானிப்பதில், ஆணைக்குழுவானது, நுண்ணாய்வின் கீழுள்ள கருமத்துக்கு இயைபானவையென ஆணைக்குழுவுக்குத் தோன்றுகின்ற எல்லாக் கருமங்களையும் கணக்குக்கெடுத்தல் வேண்டுமென்பதுடன், பின்வருவனவற்றின் விரும்பத்தகு தன்மையை விசேடமாகக் கருத்திற்கொள்ளுதலும் வேண்டும்:—

(அ) ஒழுங்குபடுத்தப்பட்ட உருவகங்களுக்கிடையே பயனுள்ள போட்டியை நிலைபெறச் செய்தலும் மேம்படுத்தலும் ; அத்துடன்

(ஆ) எதிர்ப்போட்டி வழக்கம் அல்லது ஒன்றிணைவு நிலைமை எந்தச் சந்தையில் தொழிற்படுகின்றதோ, அல்லது தொழிற்படும் சாத்தியங் கொண்டுள்ளதோ, அந்தச் சந்தை தொடர்பாகப் பாவனையாளர்களின் அக்கறைகளை மேம்படுத்துதல் ; அத்துடன்

மேலதிகமாக, ஒன்றிணைவு நிலைமையொன்றின் விடயத்தில் —

(இ) சுயேச்சையான கட்டுப்பாட்டின்கீழுள்ள ஒழுங்கு படுத்தப்பட்ட உருவகங்களின் எண்ணிக்கை, அதே பொதுப்பயன்பாட்டுத் தொழிலில் உள்ள வெவ்வேறு ஒழுங்குபடுத்தப்பட்ட உருவகங்களுக்கிடையே, ஆணைக்குழுவானது அதன் பணிகளைக் கொண்டு நடாத்துவதில் ஒப்பீடுகளைச் செய்வதற்கு ஆணைக் குழுவுக்குள்ள ஆற்றலைப் பங்கப்படுத்தும் வகையில் அவ்வாறு குறைக்கப்படுதலாகாது என்ற நெறிக்குப் பயன்கொடுத்தல்.

(5) ஆணைக்குழுவினால், 22 ஆம் பிரிவின்கீழ் நடாத்தப்படும் விசாரணையொன்றின் அல்லது நுண்ணாய்வொன்றின் விடயப் பொருளாகவுள்ள ஏதேனும் ஒழுங்குபடுத்தப்பட்ட உருவகத் துக்கு, ஆணைக்குழுவானது கேட்கப்படுவதற்கும் வாய்மொழி மூலமான அல்லது ஆவணமுறையான சான்றைக் காண்பிப்ப தற்குமான வாய்ப்பொன்றை அளித்தல் வேண்டும்.

25. (1) ஆணைக்குழுவானது, 22 ஆம் பிரிவின்கீழ் அடையாளம் காணப்படும் செயற்பாடொன்று உள்ளதென நியாயமாக நம்புகின்றவிடத்து, 15 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்குப் பங்க மின்றி, ஆணைக்குழுவானது, நியாயமான ஏதுக்களின்மீது, நீதிவானொருவரினால் வழங்கப்படும் பிரவேச ஆணைப் பத்திரத்துடனும், தேவைப்படுத்தப்படின் அதனைக் காண்பிப்ப தன்மேலும் —

பிரவேசிப்பதற்கும், பரிசோதனை செய்வதற்கும் தேடுகையிடு வதற்குமான தத்துவங்கள்.

(அ) ஏதேனும் ஒழுங்குபடுத்தப்பட்ட உருவகம் எந்த வளவுகளினுள் அதன் தொழிலைக் கொண்டு நடாத்துகின்றதோ அந்த வளவுகளினுள் அல்லது வேறெவையேனும் வளவுகளினுள் நாளின் நியாய மான எல்லா நேரங்களிலும் பிரவேசிப்பதற்கும் அவற்றைப் பரிசோதனை செய்வதற்கும், தேடுகை யிடுவதற்கும் ; அத்துடன்

(ஆ) அந்த ஒழுங்குபடுத்தப்பட்ட உருவகத்தின் இயை பான எவையேனும் பதிவேடுகளை அல்லது ஆவணங்களைப் பரிசோதனை செய்வதற்கும், அவற் றின் பிரதிகளையெடுப்பதற்கும், அல்லது அவற் றைக் கைப்பற்றித் தடுத்துவைப்பதற்கும்,

அதற்கென அதிகாரமளிக்கப்படும் ஆணைக்குழுவின் அலுவலரொருவரால் பிரயோகிக்கப்படுவதான தத்துவத்தை உடையதாதல் வேண்டும்; அத்துடன் ஆளெவரும், இப்பிரிவின் கீழான அவரது தத்துவங்களைப் பிரயோகிப்பதில் செயலாற்றுகின்ற எவரேனும் அலுவலருக்கு முட்டுக்கட்டையிடுதலாகாது.

ஏற்புடையன வாக்கப்படவேண்டிய நெறிகள்.

**26.** (1) ஆணைக்குழுவானது, இயன்றளவுவரை, சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளுக்கிடையேயான எவையேனும் இயைபான வித்தியாசங்களைக் கருத்திற்கொண்டு, பொதுப்பயன்பாட்டுத் தொழில்களில் போட்டியை ஒழுங்குபடுத்துதல் தொடர்பாக இப்பாகத்தின்கீழ் எழுகின்ற பிரச்சினை, இயைபான சட்டத்தின்கீழ் எழுகின்ற நேரொத்த பிரச்சினை எம்முறையில் நிவர்த்தி செய்யப்படுகின்றதோ அம்முறைக்கு ஒத்ததாகவுள்ள ஒரு முறையில் கையாளப்படுவதனை உறுதிப்படுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றது.

(2) இப்பாகத்தின் கீழான ஒரு பிரச்சினையைத் தீர்த்துவைப்பதில் ஏற்புடையனவாக்கப்படும் நெறிகளுக்கும் அப்பிரச்சினையைத் தீர்த்துவைப்பதில் இயைபான அதிகாரத்தினால் செய்யப்படும் முடிபுக்கும் இடையே ஒவ்வாமை எதுவும் இருக்கமாட்டாதென்பதை உறுதிப்படுத்தும் நோக்குடன், ஆணைக்குழுவானது, இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கு ஒத்ததாகவுள்ள அளவுக்குச் செயலாற்றுதல் வேண்டுமென்பதுடன், ஆணைக்குழு, மேலதிகமாக இயைபான அதிகாரத்தின் இயைபான ஏதேனும் முடிபை அல்லது கூற்றைக் கருத்திற்கொள்ளுதலும் வேண்டும்.

(3) இப்பிரிவில் "இயைபான அதிகாரம்" என்பது, பொதுப் பயன்பாட்டுத் தொழில்கள் அல்லாத வேறு தொழில்களுக்கான சமமான போட்டி ஒழுங்குபடுத்துதற் பணிகள் இயைபானதொரு சட்டத்தின்கீழ் பொறுப்பளிக்கப்பட்ட நியதிச் சட்டமுறையான ஒழுங்குபடுத்து அதிகாரம் என்று பொருளாகும்.

தவறுகளும் தண்டங்களும்.

**27.** (1) இயைபான கடப்பாடொன்றுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனுமாள், இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல்,—

(அ) அத்தகைய ஆள் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இராதிருக்குமிடத்து, பத்து இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு கோடி ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்றுக்கு, அல்லது ஏழு ஆண்டுகளை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கான அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்;

(ஆ) அத்தகைய ஆள் கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருக்குமிடத்து, ஒரு கோடி ரூபாவுக்குக் குறையாததும் பத்துக்கோடி ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்;

(இ) இருவிடயங்களிலும், தவறானது தொடர்ந்து புரியப்படும் தவறாகவிருக்குமிடத்து, அத்தகைய மீறுகை தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும், ஐந்து இலட்சம் ரூபாவான மேலதிகக் குற்றப் பணத்துக்கு ஆளாதலும் வேண்டும்;

அத்துடன், நீதிமன்றம், மேலதிகமாக அந்நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அல்லது அப்பிரிவின்கீழ் ஆக்கப்படும் கட்டளையுடன் அத்தகைய ஆள் இணங்கியொழுகும்வரை, ஆணைக்குழுவின் முன்னைய கட்டளையின் கீழ் முடிவுறுத்தப்பட்டிருக்க வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படும் அச்செயற்பாடுகளைக் கொண்டு நடாத்தாதுவிடும்படி அல்லது செய்யப்பட வெண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றவாறான அத்தகைய வேறு செயல்களைச் செய்யும்படி அத்தகைய ஆட்களுக்குக் கட்டளையிடலாம்.

(2) இச்சட்டத்தின்கீழ் குற்றத்தீர்ப்பளிக்கப்படும் எல்லா ஆட்களினதும் பெயர்களையும் முகவரிகளையும், ஆணைக்குழுவானது, அது தகுதியானதெனக் காண்கின்றவாறான அத்தகைய முறையில் வெளியிடலாம் அல்லது வெளியிடுவிக்கலாம்.

(3) ஏதேனும் தவறு ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படு மிடத்து, அப்போது,—

(அ) அந்த ஆட்கள் குழு கூட்டிணைக்கப்பட்டவொரு குழுவாகவிருப்பின், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும் அலுவலரும், அத்துடன்

(ஆ) அந்த ஆட்கள் குழு ஒரு குழுமமாகவிருப்பின், அத்தகைய குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும் ;

தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் : ஆயின், அத்தகைய பணிப்பாளர், அலுவலர் அல்லது பங்காளர், அத்தகைய தவறு தமது அறிவின்றிப் புரியப்பட்டதென்று அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கு தாம் உரிய எல்லா விழிப்புக் கவனத்தையும் பிரயோகித்தா ரென்று நீதிமன்றத்தின் திருப்திக்கு நிரூபித்தால் அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் ஆகாது.

(4) இப்பிரிவில் "இயைபான கடப்பாடு" என்பது, இப்பாகத் தின் கீழ் எவரேனுமாளின்மீது சுமத்தப்படும் கடப்பாடு என்று, அல்லது இப்பாகத்தில், ஏற்புடையதாகுமிடத்து, 15ஆம் பிரிவின் கீழான கடப்பாடுகள் என்று, அல்லது இப்பாகத்தின்கீழ் ஆக்கப்படும் ஆணைக்குழுவின் கட்டளை ஒன்று என்று அல்லது அத்தகைய கட்டளைக்கு முரணான செயல்கள் என்று பொருளாகும்.

## பாகம் VI

### பாவனையாளர் பாதுகாப்பு

பாவனையாளர் பாதுகாப்பு.

**28.** ஆணைக்குழுவானது, ஏதேனும் தொழில் சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் பின்வருவனதொடர்பில் பாவனையாளரின் உரிமைகளைப் பாதுகாத்தல் வேண்டும் :—

(அ) உயிருக்கு அல்லது ஆதனத்துக்குத் தீங்குவிளை விக்கின்ற பண்டங்களையும் சேவைகளையும் சந்தைப் படுத்தலுக்கெதிராகவும் ;

(ஆ) நியாயமற்ற வியாபார வழக்கங்களுக்கெதிராகவும்;

(இ) கேட்கப்படுவதற்கும் அவர்களின் அக்கறைக்கு உரிய கவனஞ் செலுத்தப்படுமென உறுதி கூறப்படுவதற்கும் ; அத்துடன்

(ஈ) பாவனையாளர் கல்விக்கும்.

பாவனையாளர் ஆலோசனைக்குழு.

**29.** (1) ஆணைக்குழுவானது, அமைச்சருடன் கலந்தாலோசித்த பின்னர் பாவனையாளர் ஆலோசனக்குழுவொன்றை நியமித்தல் வேண்டும்.

(2) குழுவின் அமைப்பு, ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப் பட்டவாறிருத்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் :—

(அ) இச்சட்டத்தின்கீழ் விதித்துரைக்கப்பட வேண்டிய அல்லது தீர்மானிக்கப்பட வேண்டிய தோதான நியமங்கள் மீது ஆணைக்குழுவுக்கு மதியுரையளித்தல்;

(ஆ) ஏதேனும் பொதுப் பயன்பாட்டுத் தொழிலினால் வழங்கப்படும் பண்டங்களுக்கான அல்லது சேவைகளுக்கான பாவனையாளர்களினது தேவைகள் திருப்தி செய்யப்படுகின்றனவாவென்பதைக் கண்காணித்தல் ; அத்துடன்

(இ) இச்சட்டத்தின்கீழ் விதித்துரைக்கப்படும் அல்லது தீர்மானிக்கப்படும் நியமங்கள் பற்றியும் அந்நியமங்கள் தொடர்பில் பாவனையாளர்களுக்குள்ள உரிமைகள் பற்றியும் விழிப்புணர்ச்சியை மேம்படுத்துதல்.

## பாகம் VII

### வழிகாட்டு நெறிகள்

பொதுவான கொள்கைவழிகாட்டு நெறிகளை அமைச்சர் வழங்குதல்.

**30.** (1) அமைச்சரவையானது பொதுப்பயன்பாட்டுத் தொழிலொன்றுக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருடனான கலந்தாலோசனையுடன், தகுதியானதென அது காணுமிடத்து, பொதுவான கொள்கை வழிகாட்டு நெறிகளை வகுத்தமைத்தல் வேண்டுமென்பதுடன், பின்வருவனற்றின்மீதான அத்தகைய வழிகாட்டு நெறிகளை அமைச்சரின் மூலம் ஆணைக்குழுவுக்கு வழங்குதல் வேண்டும் :—

(அ) அத்தகைய தொழில் சட்டத்தில் அல்லது அதன்கீழ் அடையாளங் காணப்படும் எந்தக் கருமத்தின்பாலது பொதுவான கொள்கை வழிகாட்டுநெறி அப்பாலதோ அந்த ஏதேனும் கருமத்தின்பாலது ;

(ஆ) ஏனைய காரியங்களுக்கிடையே, பின்வருவன தொடர்பில் நிலைபெறத்தக்க பொருளாதார வளர்ச்சிக்கான தேசிய இலக்குகளை எய்துவதற்கென அத்தகைய தொழில் சட்டத்தின்கீழ் பொதுப்பயன்பாட்டுச் சேவைகளை வழங்குவதற்கான தேவையின்பாலது —

(i) கிராமியப் பிரதேசங்களை உள்ளடக்குகின்ற வெவ்வேறு புவியியற் பிரதேசங்கள் ; அத்துடன்

(ii) வெவ்வேறு சமூக பொருளாதாரக் குழுக்கள்;

(இ) பந்தி (அ) இன்கீழ் அடையாளங்காணப்படும் தேவைகளை திருப்திப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் எடுக்கப்படும் வழிமுறைகள்பாலது ;

(ஈ) பந்திகள் (அ), (ஆ), (இ) என்பவற்றில் குறித்துரைக்கப்படும் முன்னுரிமைகளை விதிப்பதன்பாலது அத்துடன் குறிக்கோள்களை எய்துவதன்பாலது.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்படும் ஏதேனும் பொதுவான கொள்கை வழிகாட்டுநெறிகள், ஒழுங்குபடுத்தப்பட்ட உருவகமொன்று, ஏதேனும் சமூக பொருளாதாரக்குழுவுக்கு அல்லது புவியியற் பிரதேசமொன்றுக்கு பொதுப்பயன்பாட்டுத் தொழிலொன்றின் ஏதேனும் சேவையை வழங்குவதற்கு மானியமளிப்பதற்கான தேவையை விளைவிக்குமிடத்து, ஆணைக்குழுவானது அக்கொள்கை வழிகாட்டு நெறிகளைச் செயற்படுத்துவதில் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துதல் வேண்டும் :—

(அ) அத்தகைய ஒழுங்குபடுத்தப்பட்ட உருவகம் இணங்கியொழுகுகின்றமை காரணமாக அந்த ஒழுங்குபடுத்தப்பட்ட உருவகத்துக்கு ஏற்படும் எல்லா இழப்புக்கும் செலவுகளுக்கும் அரசாங்கம் அதற்கு நட்டஈடு செலுத்துவதனையும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய ஒழுங்குபடுத்தப்பட்ட உருவகம் எவையேனும் அவசியமான செயற்பாடுகளைப் பொறுப்பேற்கு முன்னர் அரசாங்கத்தினால் போதிய நிதியேற்பாடு செய்யப்படுவதனையும்.

(3) அமைச்சரானவர் —

(அ) ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டும் முடிவடைவதிலிருந்து மூன்று மாதங்களினுள், சொல்லப்பட்ட பஞ்சாங்க ஆண்டின்போது கொள்கை வழிகாட்டு நெறிகளைச் செயற்படுத்தல் தொடர்பில் அவர் எடுத்துள்ள நடவடிக்கையை எடுத்துக்காட்டி பாராளுமன்றத்துக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) ஓராம் உட்பிரிவின் கீழான பொதுவான கொள்கை வழிகாட்டு நெறிகளை வழங்குமுன்னர், அத்தகைய கொள்கை வழிகாட்டு நெறிகளைத் தகவலுக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் இடுதல் வேண்டும்.

## பாகம் VIII
## I
## நிதி

**31.** (1) ஆணைக்குழு அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆணைக்குழுவின் நிதியம்.

(2) பின்வருவன ஆணைக்குழுவின் நிதியத்தினுட் செலுத்தப் படுதல் வேண்டும் —

(அ) இச்சட்டத்தின் கீழும் வேறேதேனும் தொழில் சட்டத்தின்கீழும் ஆணைக்குழு அதன் பணிகளையும் கடமைகளையும் புரிவதற்கு நியாயமான வகையில் தேவைப்படுத்தப்படுகின்றதும், ஆணைக்குழு தாபிக்கப்பட்ட முதலாவது ஆண்டின்போது பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்படுகின்றதுமான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) தொழில் சட்டங்களின்கீழ் அறவீடுகளாக ஆணைக் குழுவினால் அறவிடப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(இ) இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறேதேனும் தொழில் சட்டத்தின்கீழ் ஆணைக்குழு அதன் தத்துவங்களை யும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப் பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அச்சட் டங்களின் கீழான, உரிமங்களை அளிப்பதற்கு அல்லது புதுப்பிப்பதற்குப் பெறப்படும் கட்டணங் களுட்பட, ஆணைக்குழுவினால் பெறப்படுகின்ற வாறான அத்தகைய எல்லப் பணத்தொகைகளும் ;

(ஈ) எத்தகையதுமான எம்மூலத்திலிருந்தேனும் கடன்கள், கொடைகள் அல்லது மானியக் கொடைகள் என்றவகையாக ஆணைக்குழுவினால் பெறப்படு கின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகை களும் ; அத்துடன்

(உ) இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் தொழில் சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளினால் நிதியத்தினுட் செலுத்தப்படுவதற்கு அதிகாரமளிக்கப் படுகின்றவாறான அல்லது தேவைப்படுத்தப்படுகின்ற வாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(3) பின்வருவன ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறேதேனும் தொழில் சட்டத்தின்கீழ் ஆணைக்குழு அதன் தத்துவங்களை யும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்ப திலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் ஆணைக் குழுவினால் உறப்படுகின்ற ஏதேனும் செலவினத் தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படு கின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகை களும் ; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் தொழில் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டினால் நிதியத்திலிருந்து செலுத்தப்படுவதற்குத் தேவைப்படுகின்ற வாறான அல்லது அதிகாரமளிக்கப்படுகின்ற வாறான அத்தகைய எல்லாப் பணத்தொகை களும்.

(4) ஆணைக்குழுவானது, நிதியென்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அங்கீகாரத்துடன், அதன் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாதவாறான அத்தகைய பணங்களை, தகுதியானவையென ஆணைக்குழு கருதக்கூடியவாறான அத்தகைய பிணையங்களில் முதலீடு செய்யலாம் என்பதுடன், அத்தகைய பிணையங்களைக் கையளிக்கலாம் அல்லது விற்பனை செய்யலாம்.

32. ஆணைக்குழுவானது, இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறேதேனும் தொழில் சட்டத்தின்கீழ் அதன் கடமைகளையும் பணிகளையும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் ஆணைக்குழுவுக்கு நியாயமான வகையில் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளை, மேலதிகப்பற்று என்ற வகையாக அல்லது வேறுவகையாக, தற்காலிகமாகக் கடன் பெறலாம் : கடன் பெறுவதற்கான தத்துவம்.

ஆயின், இப்பிரிவின்கீழ்த் திரட்டப்படும் எவையேனும் தற்காலிகக் கடன்கள் தொடர்பில் நிலுவையாகவுள்ள தொகைகளின் கூட்டுமொத்தம், நிதியென்றும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையை எந்நேரத்திலும் விஞ்சுதலாகாது.

33. (1) ஆணைக்குழுவின் ஏதேனும் ஆண்டிற்கான செலவினத்தைவிடக் கூடுதலாகவுள்ள அந்த ஆண்டிற்கான இறையின் ஏதேனும் விஞ்சுதொகை, அடுத்துப் பின்வரும் ஆண்டுகளில் அதன் செலவினத்தை ஈடுசெய்வதற்கு முன்கொணரப்படுதல் வேண்டும். செலவினம் தொடர்பான ஏற்பாடு.

(2) ஆணைக்குழுவானது, ஒவ்வோராண்டும் செத்தெம்பர் மாதத்துக்குப் பிந்தாமல், அடுத்த நிதியாண்டுக்கான அதன் மதிப்பிடப்படும் செலவினத்தை எடுத்துக்காட்டுகின்ற கூற்றொன்றைக் கசெற்றில் வெளியிடுவித்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவானது, ஏதேனும் ஆண்டிற்கான அதன் மதிப்பிடப்படும் செலவினத்தை அவ்வாண்டில் மீளாய்வு செய்யலாம் என்பதுடன், அத்தகைய ஒவ்வொரு மீளாய்வையும் கசெற்றில் வெளியிடுவித்தலும் வேண்டும்.

(4) ஏதேனுமாண்டிற்கான ஆணைக்குழுவின் செலவினம், அவ்வாண்டிற்காக (காலத்துக்குக்காலம் மீளாய்வு செய்யப்படுகின்றவாறு) அதன் மதிப்பிடப்படும் செலவினத்தின் பத்து சதவீதத்தை விஞ்சுதலாகாது.

கணக்குகளும் கணக்காய்வும்.

**34.** (1) ஆணைக்குழுவின் நிதியாண்டு, பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, ஆணைக்குழுவின் வருமானமும், செலவினமும், சொத்துக்களும், பொறுப்புக்களும், மற்றும் வேறு எல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் பற்றித் தகுந்த கணக்குப் புத்தகங்கள் வைத்திருக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும். பெறப்படும் கடன்கள் தொடர்பில் தனிவேறான கணக்குகள் பேணப்படுதல் வேண்டும்.

(3) கணக்காய்வாளர் தலைமையதிபதி ஆணைக்குழுவின் கணக்குகளை கணக்காய்வு செய்தல் வேண்டும்.

(4) கணக்காய்வாளர் தலைமையதிபதியும், ஆணைக்குழுவின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதில் அவருக்கு உதவிபுரியும் எவரேனுமாளும், அத்தகைய கணக்காய்வின் நோக்கங்களுக்காக அவசியமெனக் கணக்காய்வாளர் தலைமையதிபதி கருதக் கூடியவாறான எல்லாப் புத்தகங்களையும், உறுதிகளையும், ஒப்பந்தங்களையும், கணக்குகளையும், உறுதிச்சீட்டுகளையும், ஆவணங்களையும் பெறக்கூடியோராதலும், அத்தகைய நோக்கங்களுக்காகத் தேவைப்படக்கூடியவாறாக அவர்களின் அறிவுக்குட்பட்ட அத்தகைய தகவல் ஆணைக்குழுவினால் அல்லது அதன் அலுவலர்களினால் கொடுத்துதவப்பட்டோராதலும் வேண்டும்.

(5) கணக்காய்வாளர் தலைமையதிபதி, ஆணைக்குழுவின் கணக்குகளைப் பரிசோதனை செய்தலும் —

(அ) அவரினால் தேவைப்படுத்தப்படும் எல்லாத் தகவலையும் விளக்கங்களையும் அவர் பெற்றுக் கொண்டாரா அல்லராவெனக் கூறுகின்றதும் ;

(ஆ) அறிக்கையிற் குறிப்பீடுசெய்யப்படுகின்ற கணக்குகள் ஆணைக்குழுவின் அலுவல்களினது உண்மையானதும் நியாயமானதுமான அலுவல்களை வெளிக் காட்டும் வகையில் தகுந்தமுறையில் தயாரிக்கப் பட்டுள்ளனவாவெனக் கூறுகின்றதும் ; அத்துடன்

(இ) ஆணைக்குழுவின் செயற்பாடுகளினதும் கணக்குகளினதும் ஏதேனும் பரிசோதனையில் அவரது அபிப்பிராயப்படி பாராளுமன்றம் அக்கறை கொள்ளக்கூடிய கணக்குகளில் உள்ள ஏதேனும் விடயத்துக்குக் கவனத்தை ஈர்க்கின்றதும்,

ஆன அறிக்கையொன்றைக் கொடுத்துதவுதலும் வேண்டும்.

(6) கணக்காய்வாளர் தலைமையதிபதி (5) ஆம் உட்பிரிவின்கீழ் தம்மால் தயாரிக்கப்படும் அறிக்கையையும் கூற்றையும் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(7) கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு, ஆணைக்குழுவின் கணக்குகளைக் கணக்காய்வதில் அவரினால் உறப்படும் செலவுகளை ஈடுசெய்யும் நோக்கத்துக்காக, ஆணைக்குழு தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஊதியம் ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும். இவ்வுட் பந்தியின்கீழ் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் பெறப்படும் ஏதேனும் ஊதியம், அத்தகைய கணக்காய்வின் நோக்கங்களுக்காக அவரினால் தொழிலில் ஈடுபடுத்தப்படும் எவரேனும் தகைமைபெற்ற கணக்காய்வாளருக்கு அல்லது கணக்காய்வாளர்களுக்குச் செலுத்தப்படும் எவையேனும் பணத்தொகைகளை அதிலிருந்து கழித்தபின்னர், திரட்டு நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் IX

### பொது

ஆணைக் குழுவுக்கும் ஏனைய குழுக்களுக்கும் இடையேயான ஒத்துழைப்பு.

**35.** (1) ஆணைக்குழுவும்.—

(அ) மத்திய சூழல் அதிகாரசபை ;

(ஆ) நகர அபிவிருத்தி அதிகாரசபை ;

(இ) தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழு; அத்துடன்

(ஈ) இப்பிரிவின் நோக்கங்களுக்காக அமைச்சரினால் பெயர் குறிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு ஒழுங்குபடுத்துகைக்குழு,

ஆகிய ஒவ்வொன்றிலுமுள்ள இயைபான ஆளும், பந்திகள் (அ), (ஆ), (இ) என்பவற்றில் குறிப்பீடுசெய்யப்படும் ஆட்களின் விடயத்தில், ஆணைக்குழு தாபிக்கப்பட்ட பின்னர் ஆறு மாதங்களுக்குப் பிந்தாமலும், (ஈ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்படும் ஆட்களின் விடயத்தில், அப்பந்தியின்கீழ் அவர்கள் பெயர்குறிக்கப்படும் பின்னர் ஆறு மாதங்களுக்குப் பிந்தாமலும், பின்வருவனவற்றை உறுதிப்படுத்தும் நோக்குடன் ஒழுங்குகளைச் செய்தலும் எழுத்திலான நிருபமொன்றைத் தயாரித்தலும் வேண்டும் :—

(i) ஆணைக்குழுவுக்கும் அத்தகைய குழுக்களுள் ஒவ்வொன்றுக்கும் இடையே ஒத்துழைப்பும் தகவற் பரிமாற்றமும் ; அத்துடன்

(ii) ஆணைக்குழுவினதும் அத்தகைய குழுக்களுள் ஒவ்வொன்றினதும் பணிகளின் நோக்கெல்லைக்குள் அடங்குகின்ற கருமங்களின் ஒருசீரான செயற்கணிப்பு அது, இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாகவிராத அளவுக்கு, அத்தகைய செயற்கணிப்பு.

(2) எழுத்திலான நிருபம் ஒன்று தயாரிக்கப்பட்ட பின்னர் செயல்முறைக்குகந்தவரை விரைவாகவும் அத்துடன் அதன் ஏதேனும் மீளாய்வு தோதானதாகவுள்ளதென ஆணைக்குழுவினாலும், (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்படும் குழுக்களுள் ஒவ்வொன்றினாலும் அடுத்துப் பின்னராக உடன்பட்டுக் கொள்ளப்படுகின்ற போதெல்லாம், ஆணைக்குழுவானது, விடயத்துக்கேற்ப, எழுத்திலான நிருபத்தின் அல்லது மீளாய்வு செய்யப்படும் நிருபத்தின் பிரதியொன்றை, அமைச்சரின் தகவலுக்காக அவருக்கு அனுப்புதல் வேண்டும்.

(3) "இயைபான ஆள்" என்பது —

(அ) மத்திய சூழல் அதிகாரசபை தொடர்பாக அதன் பொது முகாமையாளராதல் வேண்டும் ;

(ஆ) நகர அபிவிருத்தி அதிகாரசபை தொடர்பாக அதன் பொது முகாமையாளராதல் வேண்டும் ;

(இ) தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழு தொடர்பாக அதன் பிரதான நிறைவேற்று அலுவலராதல் வேண்டும் ; அத்துடன்

(ஈ) உட்பிரிவு (1) (ஈ) என்பதன்கீழ் பெயர் குறிக்கப்படும் குழுவொன்று தொடர்பாக, அதன் பிரதான நிறைவேற்று அலுவலராதல் வேண்டும்.

*வழக்கு நடவடிக்கைக்கெதிரான பாதுகாப்பு.*

**36.** (1) தொடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் —

(அ) இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறேதேனும் தொழில் சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யாது தவிர்க்கப்படும் ஏதேனும் செயலுக்காக ஆணைக்குழுவுக்கெதிராக அமைவதாதலாகாது ;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறேதேனும் தொழில் சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினரினால், பணிப்பாளர் தலைமையதிபதியினால், பிரதிப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் (எவரேனுமிருப்பின்), பணியாட்டொகுதியினரால், உறுப்பினரினால், ஆலோசகரினால் அல்லது

மதியுரைஞரினால் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யாது தவிர்க்கப்படும் ஏதேனும் செயலுக்காக அவருக்கெதிராக அமைவதாகலாகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் ஆணைக்குழுவினால் அல்லது அதற்கெதிராகக் கொணரப்படும் ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் ஆணைக்குழுவினால் உறப்படும் எவையேனும் செலவுகள் ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் ஆணைக்குழுவிற்குச் செலுத்தப்படும் அல்லது அதனால் அறவிடப்படும் எவையேனும் செலவுத் தொகைகள், ஆணைக்குழுவின் நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறேதேனும் தொழில் சட்டத்தின்கீழ் அல்லது ஆணைக்குழுவின் பணிப்பின்மேல் ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினரினால், செயலாளரினால், பணிப்பாளர் தலைமையதிபதியினால், பிரதிப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் (எவரேனுமிருப்பின்), பணியாட்டொகுதியினரால், ஆலோசகரினால், அல்லது மதியுரைஞரினால் செய்யப்படும் அல்லது செய்யப்படுவதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தில் அவருக்கெதிராகக் கொணரப்படும் ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்ற வழக்கில் அவரினால் உறப்படும் எவையேனும் செலவுகள், அச்செயலானது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் கொண்டால், அத்தகைய செலவு அவரினால் அத்தகைய தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அறவிடப்பட்டாலொழிய, ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

ஆண்டறிக்கை.

**37.** (1) ஆணைக்குழுவானது, ஒவ்வொரு நிதியாண்டும் முடிந்த பின்னர் மூன்று மாதங்களினுள், அவ்வாண்டின்போது அதன் செயற்பாடுகள் பற்றியும் அடுத்துவரும் ஆண்டில் அதன் உத்தேசிக்கப்படும் செயற்பாடுகள் பற்றியுமான ஓர் அறிக்கையைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறிக்கையின் பிரதியொன்றையும் அவ்வாண்டிற்கான ஆணைக்குழுவின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளின் பிரதியொன்றையும் அமைச்சருக்கு அனுப்பிவைத்தலும் வேண்டும்.

(2) அமைச்சரானவர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்றைப் பெற்றதன்மேல் —

(அ) அத்தகைய அறிக்கையின் பிரதியொன்றைப் பாராளுமன்றத்தின் முன்னர் இடுவித்தல் வேண்டும் ;

(ஆ) ஆணைக்குழுவின் உறுப்பினர்களை பாராளுமன்றத்துக்கு அல்லது பாராளுமன்றக் குழுவொன்றுக்கு, அத்தகைய அறிக்கையிலிருந்து எழுகின்ற ஏதேனும் கருமத்தைத் தெளிவுபடுத்தத் தேவைப்படுத்தலாம் ; அத்துடன்

(இ) அத்தகைய அறிக்கையையும் கணக்குகளையும் பொது மக்களின் கவனத்துக்குக் கொண்டு வருவதற்குத் தோதானதென, அவர் கொள்ளுகின்றவாறான அத்தகைய முறையில் அவற்றை வெளியிடும்படி ஆணைக்குழுவைத் தேவைப்படுத்தலாம்.

(3) ஓராம் உட்பிரிவின் பொதுமைக்குப் பங்கமின்றி, ஒவ்வோர் ஆண்டறிக்கையும் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) ஆணைக்குழுவின் பணியினதும் குறிப்பாகப் பாவனையாளர் அக்கறைகளை மேம்படுத்துவதிலான அபிவிருத்திகளினதும் நோக்கெல்லையினுள் அடங்குகின்ற கருமங்கள் தொடர்பில் அறிக்கையானது எவ்வாண்டு தொடர்பானதோ அவ்வாண்டின் போதான முன்னேற்ற நிலை பற்றிய பொதுவான ஆய்வு ;

(ஆ) அவ்வாண்டின்போது ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட வலுவுக்கிடுதற் கட்டளை (ஏதேனுமிருப்பின்) அதுபற்றிய விபரங்கள் ; அத்துடன்

(இ) இலங்கையில் பொதுப் பயன்பாட்டுத் தொழில்களின் அபிவிருத்தியும் விசாலிப்பும் பற்றிய விபரங்கள்.

விதிகளை ஆக்குவதற்கு ஆணைக்குழுவுக்குள்ள தத்துவம்.

**38.** (1) எக்கருமங்கள் தொடர்பில் விதிகள் ஆக்கப்படுவதற்கு இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படுகின்றதோ அல்லது தேவைப்படுத்தப்படுகின்றதோ அந்த எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் ஆணைக்குழுவானது விதிகளையாக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒவ்வொரு விதியும் கசெற்றில் வெளியிடப்படுவதன்மேல் வலுவுக்கு வருதல் வேண்டும்.

எவையேனும் ஏனைய எழுத்திலான சட்டத்துடனான முரண்பாட்டுக்கான ஏற்பாடு.

**39.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளும், அதன்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளும், விதிகளும் அல்லது கட்டளைகளும், இச்சட்டம் தவிர்ந்த வேறேதேனும் இயைபான சட்டத்தில் அடங்கியுள்ள அதனோடு முரண்படும் எது எவ்வாறிருப்பினும், பயனுடையனவாதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தினது ஏற்பாடுகளுக்கும் வேறேதேனும் இயைபான சட்டத்தினது ஏற்பாடுகளுக்கும் இடையே ஏதேனும் முரண்பாடு இருக்கும் பட்சத்தில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கியிருத்தலும் வேண்டும்.

ஏற்பாடு செய்யப்படாத பிரச்சினையைச் செம்மையாக்கல்.

**40.** அமைச்சர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், எவையேனும் எதிர்பாராத அல்லது விசேட சூழ்நிலைகளுக்கு ஏற்பாடு செய்யும் அல்லது எந்தப் பிரச்சினையை அல்லது கருமத்தைத் தீர்த்து வைப்பதற்கு அல்லது செம்மையாக்குவதற்கு இச்சட்டத்தில் ஏற்பாடெதுவும் அல்லது பயனுள்ள ஏற்பாடெதுவும் செய்யப்படவில்லையோ அப்பிரச்சினை அல்லது கருமத்தை தீர்த்து வைக்கும் அல்லது செம்மையாக்கும் நோக்குடன், அவசியமென அவர் கருதக் கூடியவாறாக, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத அத்தகைய ஏற்பாடுகளைச் செய்யலாம்.

ஆணைக்குழுவின் உறுப்பினர்களும் பணியாட்டொகுதியினரும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல்.

**41.** ஆணைக்குழுவின் எல்லா உறுப்பினர்களும் பணியாட்டொகுதியினரும், தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*இலஞ்சச் சட்டத்தின் நோக்கத்துக்காக ஆணைக்குழுவானது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல்.*

**42.** இலஞ்சச் சட்டத்தின் கருத்திற்குட்பட்ட ஆணைக்குழுவானது, அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**43.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படுமிடத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பொருள்கோடல்.*

**44.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய —

"சட்டம்" என்பது, பாராளுமன்றச் சட்டம் என்று பொருளாகும் ;

"ஆண்டறிக்கை" என்பது, 37 ஆம் பிரிவின்கீழ் தயாரிக்கப்படும் ஆண்டறிக்கை என்று பொருளாகும் ;

"மத்திய சூழல் அதிகாரசபை" என்பது, 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழற் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட மத்திய சூழல் அதிகாரசபை என்று பொருளாகும் ;

"தவிசாளர்" என்பது, 8 (6) ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்படும் பிரதித் தவிசாளரையும் உள்ளடக்கும் ;

"தொடர்புபட்ட ஆள்" என்பது, எவரேனும் ஆள் தொடர்பாக, அவ்வாளின் வாழ்க்கைத் துணை, பிள்ளை, சகோதரன் அல்லது சகோதரி என்று பொருளாகும் ;

"அரசியலமைப்புப் பேரவை" என்பது, இலங்கைக் குடியரசின் அரசியல் அமைப்பின் 41அ என்னும் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட அரசியல் அமைப்புப் பேரவை என்று பொருளாகும் ;

"பாவனையாளர்" என்பது, செலுத்தப்பட்டுள்ளதும் அல்லது வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதும் அல்லது பகுதியளவில் செலுத்தப்பட்டுள்ளதும் பகுதியளவில் வாக்குறுதியளிக்கப்பட்டுள்ளதும் அல்லது ஏதேனும் பின்போடப்பட்ட கொடுப்பனவு முறைமையின் கீழ் ஆன பிரதிபயனுக்காக, விடயத்துக்கேற்ப, எவையேனும் பண்டங்களை அல்லது சேவைகளை வாங்குகின்ற அல்லது பயன்படுத்துகின்ற எவரேனுமாள் என்று பொருளாகும் என்பதுடன் பின்வருவோரையும் உள்ளடக்கும் :—

(i) செலுத்தப்படும் அல்லது வாக்குறுதி அளிக்கப்படும் அல்லது பின்போடப்பட்ட ஏதேனும் கொடுப்பனவு முறைமையின்கீழ், விடயத்திற்கேற்ப, அத்தகைய பண்டங்களை அல்லது சேவைகளை வாங்குகின்ற அல்லது பயன்படுத்துகின்ற ஆள் தவிர்ந்த அத்தகைய பண்டங்களின் எவரேனும் பயனுகரியையும் அல்லது அத்தகைய சேவைகளின் எவரேனும் பயனுகரியையும் முதற் கூறப்படும் ஆளின் அங்கீகாரத்தோடு பண்டங்கள் அவ்வாறு பயன்படுத்தப்படும் போது சேவைகள் அவ்வாறு பயன்படுத்தப்படும்போது உள்ளடக்கும்,

(ii) விடயத்துக்கேற்ப, அத்தகைய பண்டங்களின் அல்லது சேவைகளின் வாங்குநராக வரவுள்ள அல்லது பயனுகரியாக வரவுள்ள எவரேனும் ஆளையும் உள்ளடக்கும் :

"நிதியாண்டு" என்பது, பஞ்சாங்க ஆண்டு என்று பொருளாகும் :

"தொழில் சட்டம்" என்பது, எந்தக் குறிப்பான பொதுப் பயன்பாட்டுத் தொழிலின் ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதோ அல்லது குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்தக் குறிப்பான ஏதேனும் பொதுப் பயன்பாட்டுத் தொழிலை ஆளுகின்ற ஒரு சட்டம் என்று பொருளாகும் ;

"அமைச்சர்" என்பது, கொள்கை அபிவிருத்தி, செயற்படுத்துதல் என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் என்று பொருளாகும் ;

"அறிவித்தல்" என்பது, எழுத்திலான அறிவித்தல் என்று பொருளாகும் ;

"விதித்துரைக்கப்படும்" என்பது, ஒழுங்குவிதியினால், விடயத்துக்கேற்ப அமைச்சரினால் அல்லது ஆணைக்குழுவினால் விதித்துரைக்கப்படும் என்று பொருளாகும் ;

"விதித்துரைக்கப்படும் நூற்றுவீதம்" என்பது, ஒரு பயன்பாட்டு வலையமைப்பை அல்லது பயன்பாட்டுச் சேவைகளை வழங்குதல் தொடர்பாக, நாற்பது சதவீதத்தின் அதிக பட்சம் என்று அல்லது வர்த்தகம் என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள, அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படும் நூற்றுவீதம், ஏதேனுமிருப்பின், அது என்று பொருளாகும் ;

"பொதுப் பயன்பாட்டுத் தொழில்" என்பது, இச்சட்டத்தின் நோக்கத்துக்காக, எந்தப் பொதுப் பயன்பாட்டுத் தொழிலின் ஒழுங்குபடுத்துகையானது ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதோ அல்லது குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த எதேனும் பொதுப்பயன்பாட்டுத் தொழில் என்று பொருளாகும் ;

"ஒழுங்குபடுத்தப்பட்ட உருவகம்" என்பது, ஏதேனும் தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய ஆணைக்குழுவினால் அளிக்கப்படும் ஒரு செல்லுபடியான உரிமம், விலக்களிப்பு, சலுகை, அல்லது ஒப்பந்தம் என்பவற்றின்கீழ் பொதுப் பயன்பாட்டுச் சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள ஒரு கம்பனி அல்லது பொறுப்புமுயற்சி என்று பொருளாகும் ;

"இயைபான சட்டம்" என்பது, 1979 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாவனையாளர் பாதுகாப்புச் சட்டம், 1987ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, நியாய வியாபார

ஆணைக்குழுச் சட்டம் அத்துடன் (173 ஆம் அத்தியாயமான) விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம் என்று அல்லது அவற்றினுள் எவற்றையும் மாற்றீடு செய்கின்ற ஏதேனும் சட்டம் என்று அல்லது பொதுப் பயன்பாட்டுத் தொழில்கள் தவிர்ந்த தொழில்களுக்கான சம போட்டி ஒழுங்குபடுத்துதல் ஏற்பாடு களைக் கொண்டுள்ள அத்தகைய வேறு சட்டம் என்று பொருளாகும் ;

"தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழு" என்பது, 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கைத் தொலைத் தொடர்புகள் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழு என்று பொருளாகும் ;

"நியாயமற்ற வியாபார வழக்கம்" என்பது, எவையேனும் பண்டங்களை விற்பனை செய்வதனை, பயன்படுத்துவதனை அல்லது வழங்குவதனை மேம்படுத்தும் அல்லது ஏதேனும் சேவையை வழங்கும் நோக்கத்துக்காகப் பின்வரும் வழக்கங்களுள் எவையும் உட்பட, நியாயமற்றவொரு முறையை அல்லது நியாயமற்ற அல்லது ஏமாற்று வழக்கத்தைக் கடைப்பிடிக்கின்ற ஒரு வியாபார வழக்கம் என்று பொருளாகும் : அதாவது —

(1) (அ) பண்டங்களானவை, குறிப்பானவொரு நியமத்தினவானவை, தரத்தினவானவை, அளவினவானவை, தராதரத்தினவானவை, ஆக்கக் கூறினவானவை, வடிவத்தின வானவை அல்லது மாதிரியினவானவை என்று பொய்யாகக் காட்டி நிற்கின்ற ;

(ஆ) சேவைகளானவை குறிப்பானவொரு நியமத்தினவானவை, தரத்தினவானவை அல்லது தராதரத்தினவானவை என்று பொய்யாகக் காட்டி நிற்கின்ற ;

(இ) எவையேனும் பண்டங்களின் அல்லது சேவைகளின் தேவை சம்பந்தமாக அல்லது பயனுடைத்தாந்தன்மை சம்பந்தமாகப்

பொய்யான அல்லது பிழைவழி உய்க்கும் எடுத்துக் காட்டுகையைச் செய்கின்ற :

(ஈ) இன்னோராளின் பண்டங்கள், சேவைகள் அல்லது வியாபாரம் என்பவற்றை இகழ்கின்ற பொய்யான அல்லது பிழைவழி உய்க்கும் நிகழ்வுகளைக் கொடுக்கின்ற :

ஏதேனும் கூற்றை, வாய்மொழிமூலமாகவேனும் அல்லது எழுத்திலேனும் அல்லது புலப்படு விதமான எடுத்துக்காட்டுகைமூலம் அளிக்கின்ற வழக்கம் : அத்துடன்

(2) பண்டங்களைப் பயன்படுத்துகின்ற ஆளுக்கு ஊறு ஏற்படும் அபாயத்தைத் தடுப்பதற்கு அல்லது குறைப்பதற்கு அவசியமானவாறாக, செயல்நிறைவேற்றம், ஆக்கக்கூறு, கொள்ளடக்கங்கள், வடிவமைப்பு, நிர்மாணம், முடிவுநேர்த்தி அல்லது பொதியிடுதல் தொடர்பாக ஏதேனும் தொழில் சட்டத்தினால் அல்லது அதன் கீழான ஏதேனும் ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்படும் நியமங்களுக்கு அப்பண்டங்கள் இணங்கியொழுகுவனவல்ல என அறிந்து கொண்டு அல்லது நம்புவதற்குக் காரணம் உடையவராக விருந்து, பாவனையாளர்களினால் பயன்படுத்தப்படுவதற்கு முன்னப்படும் அல்லது பயன்படுத்தப்படும் சத்தியங்கொண்ட வகையினவாகவுள்ள பண்டங்களின் விற்பனையை அல்லது வழங்கலை அனுமதிக்கின்ற வழக்கம் :

"நகர அபிவிருத்தி அதிகாரசபை" என்பது, 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபை என்று பொருளாகும்.

**அட்டவணை** [பி. 1(2) ]

1. மின்சாரத் தொழில் : அத்துடன்
2. நீர்ச் சேவைத் தொழில்.

---

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 :* (வெளிநாடு) *ரூபா 1,849 :* ஒவ்வோராண்டும் திசெம்பர் *மாதம் 15* ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான *சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க* வெளியீட்டலுவலகம், *அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை,* பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்